www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.


# தொழிலாளர் பாதை

DM 1,50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 385 ★ 1988 ஜூலை 15 வெள்ளிக்கிழமை


**பண்டிதவின் கொலையை கண்டனம் செய்!**

- ல. ச. ச. க.—கம்யூனிஸ்ட்—நவ ச. ச. க. தலைமைகளை மக்கள் முன்னணியிலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்தி!
- தொழிலாளர் பாதுகாப்பு படையை கட்டியெழுப்பு!
- யூ. என், பி. அரசாங்கத்தை வெளியேற்று!
- தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்துக்காக போராடு!

**பகிரங்கக் கூட்டம்** — **யூலை 14**

நாராயண குரு மண்டபம்
கொழும்பு திபுல்கஸ் சந்தி. — பி. ப. 5 மணி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் — இளம் சோஷலிஸ்டுகள்

# சோவியத் யூனியன் மாஸ்கோ பொய் வழக்குகளை நிராகரிக்கின்றது!

# ஒரு வரலாற்று நிருபணம்

## அமெரிக்க "வேர்க்கஸ் லீக்" அரசியல் குழு அறிக்கை

சோவியத் யூனியனின் உயர் நீதிமன்றம், ஜுன் 13 திங்கட்கிழமை, 1936–37 மாஸ்கோ பொய் வழக்குகளின்போது மரண தண்டனை விதிக்கப்பட்ட கிரிகோரி சினோவியேவ், லேவ் கமனேவ், யூரி பியாட்கோவுக்கும் ருஷ்யப் புரட்சியின 'பழம் போல்ஷிவிக்' தலைவர்களுக்கும் புனர் வாழ்வளித்ததாக அறிவித்தது.

'இசுவெஸ்தியா' பத்திரிகையின்படி உயர் நீதிமன்றம், நாசி ஜேர்மனிக்கு உளவு பார்த்தமைக்கும் ஏனைய சோவியத் விரோத நடவடிக்கைகளுக்கும் குற்றவாழிகளாகக் காணப்பட்டவர்கள் அனைவரும் சுற்றவாழிகள் என தீர்ப்பளித்தது 33 பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களையும் தண்டனைகளையும் உயர் நீதிமன்றம் தலைகீழாக்கியது.

இஸ்வெஸ்தியா கூறியதாவது: 'அவர்கள் எதிரிகள் அல்ல என்பது இப்போது தெளிவாகி விட்டது. சட்டம், அரசு அல்லது மக்கள் முன்னிலையில் அவர்கள் குற்றவாளிகள் அல்லர். 70 ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் சிருஷ்டிக்க உதவிய அதே அரசு அவர்களுக்கு மீண்டும் அவர்களின் கௌரவத்தையும் அவர்களின் பெயரையும் வழங்குகின்றது.'

மாஸ்கோ பொய் வழக்குகள் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசாங்க தீர்மானத்தின்படி இலட்சோப இலட்சம் ஆரம்ப, உயர்நிலை பாடசாலை மாணவர்களின் இவ்வாண்டு இறுதி வரலாற்று பரீட்சைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் அரசாங்கப் பாடப் புத்தகங்கள் முழுப் பொய்களைக் கொண்டுள்ளதே

பழம் போல்ஷிவிக்குகள் மரண தண்டனை விதிக்கப்பட்டதற்குக் காரணம் அவர்கள் ஸ்டாலினின் அரசியல் எதிரிகளாக விளங்கியதே. இதை இஸ்வெஸ்தியா கட்டுரை ஒப்புக் கொண்டது.



லியோன் ட்ரொட்ஸ்கி

"ஸ்டாலினின் கொள்கைக்கு எதிரான போராட்டம் கட்சி விரோதமாகக் கணிக்கப்பட்டது ஏன்"? இஸ்வேஸ்தியா கேட்டது. "நீங்கள் வேறொரு கருத்துக் கொண்டிருப்பின் அப்போது நீங்கள் கருத்து முரண்பட்டவனாக கொள்ளப்பட்டு கழுமரத்தில் ஏற்றப்பட வேண்டும் என நோக்கப்பட்டது."

1936 ஆகஸ்டு மாதத்தில் முதல் மூன்று மாஸ்கோ பொய் வழக்குகளின் முடிவில் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதில் இருந்து 1917 அக்டோபர் புரட்சி வரையிலான தசாப்தத்தில் லெனினின் நெருங்கிய சகாக்களும், சோவியத் அரசின் ஆரம்ப வருடங்களில் பெரும் புள்ளிகளுமான சினோவியேவ், கமனேவின் அரசியல் பங்களிப்புக்கள் சோவியத் பத்திரிகைகளில் முதற் தடவையாக சாதகமாக விமர்சிக்கப்பட்டன.

லெனினின் போல்ஷிவிக் கட்சியில் ருஷ்யாவில் எஞ்சியிருந்த அனைத்தையும் உடல் ரீதியில் அழித்தொழிக்க ஸ்டாலினால் பயன்படுத்தப்பட்ட நீதித்துறை புனை வழக்குகளை இந்தத் தீர்ப்பு முழுமனே அவமானத்துக்குள்ளாக்கிய போதிலும், உயர் நீதிமன்றம் மாஸ்கோ பொய் வழக்குகளின் முக்கிய இலக்காக விளங்கிய ஒரு மனிதனை புனர்வாழ்வு செய்ய இன்னமும் தவறி விட்டது. அவர் அக்டோபர் புரட்சியின் பூரணத் தலைவரும், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மன்னிக்க முடியாத எதிரியும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகருமான லியோன் ட்ரொட்ஸ்கி.

ட்ரொட்ஸ்கியையும், அவரின் மகன் லியோன் செடோவையும் உத்தியோக பூர்வமாக புனர் வாழ்வளிப்பதில் இருந்து நீக்கிவிடச் செய்யும் முயற்சி— சினோவியவும், கமனேவும், பியாட்டகோவுக்கும் மொஸ்கோ பொய் வழக்குகளின் ஏனைய சகல பிரதிவாதிகளுக்

★ 2 ம் பக்கம் பார்க்கவும்



**கீர்த்தி பாலசூரியாவின் நினைவு நீடு வாழ்க!**

**பகிரங்கக் கூட்டம்**

யூலை 23 பி ப 4 மணி

அம்பலாங்கொடை, நகர மண்டபம்

**கண்காட்சி காட்சி 10 மணி**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இளம் சோஷலிஸ்டுகள்

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியன் மாஸ்கோ போய்...

[முன் பக்கம் தொடர்ச்சி]



யூரி
பியாட்டகோவ்



கிரகரி
சினேவியவ்

ளும் எதிரான குற்றச் சாட்டுக்கள், அவர்கள் ட்ரொட்ஸ்கியால் உருவாக்ப்பட்ட ஒரு சோவியத் விரோத பயங்கரவாத இயக்கத்தின் ஒரு பாகமே என்ற முற்றிலும் ஆதாரமற்றதும் விநோதமானதுமான குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

மேலும் சினேவியவ், கமனேவ் வழக்குகளில் ட்ரொட்ஸ்கியும், செடோவும் பிரதான குற்றவாளிகளாக விளங்கினர். அவர்கள் ஆஜராகாமலேகுற்றவாளிகளாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டனர்.

1937 ஜனவரியில் பொய் வழக்குகளின் இரண்டாவது சுற்றில் பியாட்டகோவும் கார்(ல்) ரடேக் அவரும் புனர்வாழ் வழிக்கப்பட்டவர் உட்பட்ட ஏனையோரும் ட்ரொட்ஸ்கியிடமிருந்து பயங்கரவாத கட்டளைகளை பெற்று வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

ஆனுல் மரணத்தின் பின்னர் குற்றச்சாட்டினை அகற்றுவதன் மூலமும். சகல குற்றச்சாட்டுக்களினதும் பிரதிவாதி சுற்றவாளிகள் என ஊர்ஜிதம் செய்வதன் மூலமும் உயர் நீதிமன்றம் ட்ரொட்ஸ்கியும், செடோவும் வரலாற்றில் இடம் பெற்ற பயங்கரமான சேறடிப்பும், பொய்மைப்படுத்துதமான பிரச்சாரத்திற்கு பலியானவர்கள் என்பதை ஒப்புக் கொண்டதை உணர்த்தியுள்ளது.

உயர் நீதிமன்றம், ட்ரொட்ஸ்கி நிரபராதி என்பதை பிரகடனம் செய்யும் விதத்தில் ஒரு வெளிப்படையான அறிக்கையை வெளியிடவில்லை. இது அவரின் பெயர் இன்னமும் சோவியத் அதிகாரத்துவத்தின் உள்ளே அச்சத்தை உண்டாக்குகின்றது என்பதைக் காட்டும் ஒரு நடவடிக்கையாக விளங்குகின்றது.

ஆனுல் இந்த கோழைத்தனமான நழுவல்களுக்கிடையேயும் உயர் நீதிமன்றத்தின் பிரகடனம், ட்ரொட்ஸ்கிசத்தின் வரலாற்று நிலைமை ஞாபக சின்னமாக விளங்குகின்றது: உலக புரட்சிகர இயக்கமான ட்ரொட்ஸ்கிசத்தின் முழு வரலாற்று இருப்பும், ஸ்டாலினிசத்துக்கும், சோவியத், அனைத்துலக தொழிலாள வர்க்கத்திற்கும் எதிரான அதன் அக்கிரமான குற்றங்களுக்குஎதிரான போராட்டத்துடனும் பிணைக்கப்பட்டுள்ளது.

இலட்சோப இலட்சம் சோவியத் தொழிலாளர்கள் ருஷ்யாவில் முதலாளித்துவத்தை தூக்கி வீசி, உலக வரலாற்றில் முதல் தொழிலாளர் அரசினை ஸ்தாபித்த லெனின்-ட்ரொட்ஸ்கியுடன் இணைந்து நின்ற போல்ஷிவிக் தலைவர்களின் முழுத் தலைமுறையையும் மூர்க்கமாக ஒழித்துக்கட்டியதன் மூலமே ஸ்டாலினிச அதிகாரத்துவம் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தியது என்பதை முதற் தடவையாக அறிந்து கொண்டுள்ளார்கள்:

நிச கம்யூனிஸ்டுகளும் புரட்சியாளர்களுமே ஸ்டாலினின் பொய் புனை வழக்குகளிற்கு பலியானுர்கள் என இன்று கூறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சோவியத் தொழிலாள வர்க்கம், பழம் போல்ஷிவிக்குகள் நிர்மூலமாக்கப்பட்டதற்கான அரசியல் காரணங்களை அறிந்து கொள்ள வேண்டும் எனக் கோரும்.

இவை கொர்பச்சோவால் பதிலளிக்க முடியாத கேள்விகள் ஆகும். கொர்பச்சோவும் இந்த அதிகாரத்துவத்தின் ஒரு பாகமாவார். அவரின் தோற்றம் இன்று இலட்சோப இலட்சம் மக்களின் முன்னர் அம்பலமாக்கப்பட்டு வரும் இதே குற்றங்கள்ல் வேரூன்றி உள்ளது.

1923ல் இடதுசாரி எதிர்க்கட்சியை ஸ்தாபித்ததில் இருந்து, ட்ரொட்ஸ்கி, அதிகாரத்துவத்தின் வளர்ச்சிகாணும் அதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தினை தொடங்கினுர். இந்த அதிகாரத்துவத்தின் தோற்றம், சோவியத் அரசின் தோற்றத்தின் முதல் வருடங்களில் காணப்பட்ட பெரும் பொருளாதார பின்தங்கிய நிலையில் சட்ட ரீதியாக வேரூன்றியது. இப் பின் தங்கிய நிலைமை, போல்ஷிவிக்குகள் 1917ல் தாம் தூக்கி வீசிய பழம் ருஷ்ய ஆட்சி முறையில் இருந்து உரிமையாக்கிக் கொண்ட முதுசமாகும். இது இளம் சோவியத் அரசினை ஏகாதிபத்திய சுற்றி வளைப்புக்களால் உக்கிரமானது.

ட்ரொட்ஸ்கி, சோவியத் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும், வெகு ஜனங்களின் வாழ்க்கை நிலைமையை முன்னேற்றவும் கவனமாகத் திட்டமிடப்பட்ட ஒரு வேலைத்திட்டத்துக்காக வாதிட்டு வந்தார். அவர் தொழிலாளர் அரசின் உயிர் வாழ்வும், சோஷலிசத்தின் வளர்ச்சியும் பாட்டாளி வர்க்கப் புரட்சியை சோவியத் அரசுகளின் எல்லைகளுக்கு அப்பால் விரிவுபடுத்துவதிலும் எல்லாவற்றுக்கும் மேலாக மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்க அரசுகளிலும், உள்ள முதலாளித்துவத்தின் சக்தி வாய்ந்த கோட்டைகளுக்கு விஸ்தரிப்பதில் தங்கியுள்ளது என வலியுறுத்தினுர்.

ஆனுல் 1924ல் ஸ்டாலின், பழமைவாத அதிகாரத்துவசாதியின் பேச்சாளராக முன்னரைக் காட்டிலும் அப்பட்டமாக வெளித்தோன்றினுர். மார்க்சிசத்தின் அனைத்துலக கொள்கைகளை நிராகரித்துவிட்டு, சோஷலிசத்தை தனியொரு நாட்டில் நிர்மானிக்க முடியும் என அவர் பிரகடனம் செய்தார். இந்தப் பிற்போக்கு தேசியவாத முன் நோக்கு அதிகாரத்துவத்துக்கு ஒரு அரசியல் பதாகையை வழங்கியது. இது சோவியத் யூனியனுள் அதனது சமூக சலுகைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தை அதிகரித்துக் கொண்டது.

ட்ரொட்ஸ்கி தலைமையிலான இடதுசாரி எதிர்க்கட்சிக்கும் ஸ்டாலின் தலைமையிலான அதிகாரத்துவத்துக்கும் இடையேயான இந்த வீரகாவிய போராட்டம் இரண்டு சமரசம் செய்ய முடியாத அரசியல், சமூக போக்குகளுக்கு இடையேயான போராட்டமாக விளங்கியது. 1917 அக்டோபர் வெற்றிக்கு அடித்தளமாக விளங்கிய நிரந்தரப் புரட்சி வேலைத் திட்டத்தை பேணிய வண்ணம் ட்ரொட்ஸ்கி, ஸ்டாலினின் அதிகாரப் பெருக்கமும், சோவியத்துக்களும் (தொழிலாளர் சபைகள்) உட் கட்சி ஜனநாயகமும் நசுக்கப்பட்டமையும், அக்டோபர் புரட்சிக்கு எதிரான அதிகாரத்துவத்தினதும் அது சார்ந்துள்ள குட்டி முதலாளித்துவச் சக்திகளதும் ஒரு அரசியல் பிரதிபலிப்பை வெளிக்காட்டியது.

மேலும் 1924—1927 க்கும் இடைப்பட்ட காலத்தில் ட்ரொட்ஸ்கி, 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற மார்க்சிச விரோத கோட்பாடு அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் மீது அழிவுமிக்க தாக்கங்களை ஏற்படுத்துவதோடு ஒரு பாரதூரமான விளைவுகளைக் கொண்ட தோல்விகளுக்கும் இட்டுச் செல்லும் எனவும், அவை மறுபுறத்தில் சோவியத் யூனியனின் தனிமைப்படுத்தலை உக்கிரமாக்கும் எனவும் எச்சரிக்கை செய்தார்,

சோசலிசப் புரட்சியை விரிவு படுத்துவதில் சோவியத் யூனியனின் பாதுகாப்பினை தனிமைப்படுத்துவதன் மூலம் ஸ்டாலினிச அதிகாரத்துவம், 1919ல் உலக முதலாளித்துவத்துக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களை வழி நடாத்த நிறுவப்பட்ட மூன்றாம் (கம்யூனிச) அகிலத்தை சோவித் வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு வெறும் கருவியாக உருமாற்றியது: 'தனி ஒரு நாட்டில் சோசலிசத்தின்' அரசியல் கிளைத்தோற்றமே 'சமாதான சகவாழ்வு'. கம்யூனிஸ்ட் அகிலத்தில் இருந்து ட்ரொட்ஸ்கின் ஆதரவாளர்களை சோவியத் அதகாரத்துவம், வெளியேற்றிய பின்னர், உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கொள்கைகள் சோவியத் இராஜதந்திரத்தின் நடைமுறை தேவைகளினுலேயே அதாவது, ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து இராஜ தந்திர சலுககளை பிடுங்கிக் கொள்வதினுலேயே மேலும் மேலும் நிர்ணயம் செய்யப்பட்டன.

ஸ்டாலினின் தலைமையின் கீழ் கம்யூனிஸ்ட் அகிலத்தினுலும் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியினுலும் கடைப்பிடிக்கப்பட்ட அழிவுகரமான கொள்கைகளின் காரணமாக, 1933ல் ஜேர்மன் தொழிலாள வர்க்கம் நாசிகளால் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் இதுவே நிலைமையாகும். ஸ்டாலின் சோவியத் அதிகாரத்துவத்தை அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தினுள் ஓர் அப்பட்டமான எதிர்ப் புரட்சி சக்தியாக பரிணமம் செய்வதைப் பூர்த்தி செய்தார்.

ஸ்டாலினிசத்தினுல் ஜேர்மன் தொழிலாள வர்க்கம் வரலாற்று ரீதியில் காட்டிக் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அச் சமயம் நாடு கடத்தப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த ட்ரொட்ஸ்கி, கம்யூனிஸ்ட் அகிலம் ஒரு புரட்சிகர சக்தி என்ற முறையில் முழுமனே நாசமாக்கப்பட்டுவிட்டதெனப் பிரகடனம் செய்ததோடு நான்காம் அகிலத்தை கட்டி எழுப்ப முன் வருமாறு அழைப்பு விடுத்தார்.

1930பதுகளின் நடுப்பகுதியில் ஸ்டாலின் தொடுத்த ''மாபெரும் பயங்கரத்துக்கு'' இரண்டு காரணிகள் அடிப்படையாக விளங்கின.

முதலாவதாக, சோவியத் அதிகாரத்துவம், வரலாற்றின் மாபெரும் புரட்சிக்கு தலைமை தாங்கிய போல்ஷிவிக் கட்சியின் எஞ்சிய சகல மனித ஜீவன்களையும், அழித்தொழிப்பதன் மூலம் தனது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளத் திடசங்கற்பம் பூண்டது. சினேவியவ், கமனேவ், பியாட்டகோவும் ஏனைய பிரதிவாதிகளும் ஸ்டாலினின் கொள்கைகளின் பேரிலான தமது அரசியல் எதிர்ப்பினை நீண்ட காலத்துக்கு முன்பே மறுதலித்ததொடு அவர்கள் ட்ரொட்ஸ்கியின் கடும் எதிரிகளாக மாறினர். இருந்த போதும் அவர்களின் உயிர் நீடிப்பு, ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பு திரள்வதற்கான இடமாக மாறிவிடக் கூடும் என சோவியத் அதிகாரத்துவம் அஞ்சியது.

இரண்டாவதாக, ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சியினுல் ஏற்பட்ட ஆபத்தினுல் அச்சம் கண்டு ஏகாதிபத்திய 'ஜனநாயகங்களுடன்' கூடுச்சேவும் கையாலாகாத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. ஸ்டாலின், சோவியத் ஆட்சியாளர்கள், பழம் போல்ஷிவிக்குகள் இனங்காட்டிய உலகப் புரட்சி முன்நோக்கில் இருந்து தம்மை முழுமனே துண்டித்துக் கொண்டு விட்டதாக அனைத்துலக முதலாளி வர்க்கத்தினை நம்பவைக்கும் அத்தாட்சியினை வழங்க முயன்ருன். ஸ்டாலினுக்கு அவமானமிக்க முறையில் அடிபணிந்த போதிலும் சினேவியேவ் எல்லாவற்றுக்கும் மேலாக, கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் தலைவராவார். அக்டோபர் புரட்சியை வழி நடாத்திய அரசியல் தலைவர்களின் முழுதலைமுறையையும் படுகொலை செய்ததன் மூலம் ஸ்டாலின், சோவியத் யூனியன் புரட்சிகர அனைத்துலகவாதம் உறுதியாக பேணப்பட்ட அனைத்துலக அரசியல் அந்தங்களில் இருந்து மாற்ற முடியாத முறையின் தன்னைத் துண்டித்துக் கொண்டு விட்டதென உலகை ஏகாதிபத்தியத்தினை நம்பச் செய்ய முயன்ருன்.

★ 7ம் பக்கம் பார்க்கவு

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியன் மொஸ்கோ பொய் வழக்கு . . .

## (2ம் பக்கத் தொடர்ச்சி )

எனவேதான் சோவியத் ருஷ்யாவின் உள்ளே மாஸ்கோ பொய் வழக்குகளும் இலட்சாப இலட்சம் மார்க்சிஸ்டுகளின் அழித்தொழிப்புக்களும் அவற்றுடன் இணைந்தபடி எண்ணற்ற ஆயிரமாயிரம் ஐரோப்பிய புரட்சியாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர். ஜேர்மனி, போலந்து, இத்தாலி அத்தோடு ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இருந்து சோவியத் ருஷ்யாவுக்கு வந்த கம்யூனிஸ்ட் அகதிகள் ஜீ.பீ.யூ.வினால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு ஒட்டு மொத்தமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஸ்டாலினின் கட்டளைகளின் பேரில் போலந்து கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணிக் காரியாளர்கள் அனைவரும் அடியோடு படுகொலை செய்யப்பட்டனர்.

சோவியத் யூனியனின் எல்லைகளுக்கு அப்பால், சிறப்பாக ஸ்பெயினில் ஸ்டாலினின் கொள்கையை எதிர்த்த புரட்சிகர எதிர்ப்பாளர்கள் சோவியத் இரகசியப் பொலிசான ஜீ.பீ.யூ.வின் விசேட படைப் பிரிவுகளால் நிர்மூலமாக்கப்பட்டனர். ஸ்பெயினில் பிராங்கோவின் தலைமையிலான பாசிசப் படைகளுக்கு எதிரான போராட்டம் வளர்ச்சி காண்பதை தடுப்பதே இப் படுகொலைகளின் நோக்கமாகும்; இந்த எதிர்ப்பு போராட்டம் ஸ்பானிய முதலாளித்துவத்துக்கு எதிரான ஒரு பாட்டாளி வர்க்க புரட்சி வடிவம் எடுப்பதை தடை செய்யவும், அத்தகைய ஒரு அபிவிருத்தி பிரான்சு, பிரித்தானியாவுடனான தனது உறவுகளைச் சீர்குலைக்கும் எனவும் ஸ்டாலின் அஞ்சினான். மேலும், ஐரோப்பாவில் ஒரு வெற்றிகரமான புரட்சியின் தாக்கம் சோவியத் தொழிலாளர்களின் மனோநிலை அரசியல் நனவுகளில் ஏற்படுத்தும் பாரிய தாக்கங்களையிட்டு ஸ்டாலின் நடுநடுங்கினான். ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு புரட்சிகர முன் பயணமும் சோவியத் தொழிலாளர்களைப் பலப்படுத்துவதோடு, அதிகாரத்துவத்தின் அந்தஸ்தையும் பாதிக்கும் என்பதையும் அவன் நன்கு அறிந்திருந்தான்.

1936ல் ட்ரொட்ஸ்கி தமது மாபெரும் விஞ்ஞான பூர்வமான ஆக்கமாகிய 'காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி' என்ற நூலை பிரசுரித்தார். சோவியத் அதிகாரத்துவம் ஒரு ஒட்டுண்ணி சமூக தட்டு. அது தொழிலாளர் அரசின் மேல் உலக ஏகாதிபத்தியத்தின் அழுத்தத்தின் சட்ட ரீதியான வெளிப்பாட்டினைக் காட்டுகின்றது. சோவியத் அதிகாரத்துவம் ஒரு புதிய ஆளும் வர்க்கமாகும் என பல குட்டி முதலாளித்துவக் கோட்பாட்டாளர்கள் முன் வைத்த கருத்துக்களை ட்ரொட்ஸ்கி மறுத்தார். மார்க்சிச நிலைப்பாட்டின்படி அதிகாரத்துவம், ஒரு சமூக வர்க்கத்துக்கு அத்தியாவசியமான வரலாற்று பண்பினைக் கொண்டிருக்கவில்லை. அதாவது: உற்பத்திச் சாதனங்களுடன் சுயாதீனமான உறவு. சமூகத்தின் உற்பத்தி உறவுகளில் இது ஒரு வரலாற்று ரீதியில் அவசியமான பாத்திரத்தை வகிக்கின்றது. அதிகாரத்துவம் புதிய சொத்து வடிவங்களை சிருஷ்டிப்பதற்கு மாறாக, 1917 புரட்சியின் பெறுபேறாக பாட்டாளி வர்க்கத்தினால் நிலை நாட்டப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளில் தங்கியுள்ளது;

எவ்வாறெனினும் அதிகாரத்துவத்தினுள் முதலாளித்துவ போக்கின் பிரசன்னத்தையும், தனது சலுகைகளை நிலைநாட்ட திட்டவட்டமான சமூக வடிவங்களை ஏற்படுத்தும் அதன் உந்துதலையும் கண்ட ட்ரொட்ஸ்கி, அதிகாரத்துவ ஆட்சி இறுதியில் சோவியத் யூனியனில் முதலாளித்துவத்தை புனருத்தாரனம் செய்வதற்கு இட்டுச் செல்லும் என எச்சரித்தார்.

எனவேதான் ட்ரொட்ஸ்கி, அக்டோபர் புரட்சியின் தேட்டங்களும், சோவியத் ருஷ்யாவின் சோஷலிசத்தை நோக்கிய புரட்சிகரபரிணாமமும் ஒரு அரசியல் புரட்சியினால் அதிகாரத்துவத்தை தூக்கி வீசுவதன் மூலம் மட்டுமே அடைய முடியும் என வலியுறுத்தினார். அப் புரட்சி சலுகைகள் படைத்த அதிகாரத்துவத்தை நாட்டில் இருந்து துடைத்துக் கட்டுவதோடு 1917ல் நிலை நாட்டப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளை பேணிக் காக்கும்.

சோவியத் யூனியனின் உள்ளே இலட்சோப இலட்சம் கம்யூனிஸ்டுகளை படுகொலை செய்து வருகையில் ஸ்டாலினின் அதிகாரத்துவம் ட்ரொட்ஸ்கி, நான்காம் அகிலத்தினையிட்டு உயிருக்கு அஞ்சி வாழ்ந்தது. ஏனெனில் அவர்கள் அதிகாரத்துவ ஒட்டுண்ணிகள் மீதான சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் அழியாத கசப்பின் நனவான இணைப்பினை பிரதி நிதித்துவம் செய்து கொண்டுள்ளனர் என்பதை அங்கீகரித்தது.

எனவேதான் ஜீ. பீ. யூ. நான்காம் அகிலத்தின் தலைவர்களை ஒழித்துக்கட்ட பொறுக்கி எடுத்தது. 1931 கோடையில் ட்ரொட்ஸ்கியின் செயலாளர்களில் ஒருவரான இர்வின் வுல்வ் ஸ்பெயினில் கொலை செய்யப்பட்டார். 1938 பெப்ரவரியில் லியோன் செடோவ் பிரான்சில் படுகொலையானார். 1938 ஜூலையில் நான்காம் அகிலத்தின் செயலாளர் ருடோல்வ் கிளமென்ட் பிரான்சில் கொலை செய்யப்பட்டார். இறுதியாக 1940 ஆகஸ்டில் ட்ரொட்ஸ்கி, ஸ்டாலினிச ஏஜன்ட் ரேமன் மக்காடரினால் மெக்சிக்கோவில் படுகொலை செய்யப்பட்டார்,

ஆனால் அவரின் மரணத்தின் முன்னர் ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்தை ஸ்தம்பிதம் செய்வதில் மட்டும் வெற்றி கண்டிருக்கவில்லை. மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட தடைகளாக தோன்றிய போதிலும் அவர் மாஸ்கோ பொய் வழக்குகளையும், பழம் போல்ஷிவிக்குகள் ஒழித்துக் கட்டப்பட்டதையும் வரலாற்றில் இடம் பெற்ற மாபெரும் பொய் புனைதல் வழக்குகளாக அம்பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார்.

அந்த நிலைமைகளின் கீழ் "நியூயோர்க் டைம்ஸ்" போன்ற முன்னணி முதலாளித்துவப் பத்திரிகைகள் ஸ்டாலினிச தீர்ப்புக்களுக்கே மதிப்பளித்து வந்தன. உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சிகள் பழம் போல்ஷிவிக்குகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்க துடித்து வந்தன. குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும், சோவியத் ருஷ்யாவின் நண்பர்கள் எனப்பட்டவர்களும், ஸ்டாலினின் புகழ் பாடியும், மாஸ்கோ நீதிமன்றின் 'கண்டுபிடிப்பை' அங்கீகரித்தும் வந்தன; ட்ரொட்ஸ்கியும் நான்காம் அகிலத்தின் அவரின் ஆதரவாளர்களும் குற்றச்சாட்டுக்களை சுக்குச் சுக்காக கிழித்து எறிந்தனர்.

1937 ஜனவரியில் ட்ரொட்ஸ்கி மாஸ்கோ பொய் வழக்குகளை புனர் விசாரணை செய்வதற்கான ஒரு அனைத்துலக ஆணைக்குழுவினை நிறுவும்படி அழைப்பு விடுத்தார். அதில் அவர் தம்மையும் தமது கோவைகளையும் பூரணமாயும் பகிரங்கமாயும் ஆய்வுக்குள்ளாக்க வழங்குவதாய் தெரிவித்தார். 1937 பெப்ரவரி 9ல் ட்ரொட்ஸ்கி பின்வரும் வாக்குறுதியை வழங்கினார்;

"ஸ்டாலின் என் மீது சுமத்தும் குற்றச் சாட்டுகளுக்கு நான் சிறிதளவிலும் குற்றவாளி என ஆணைக்குழு முடிவு செய்யின் நான் என்னை ஜீ.பீ.யூ. கொலையாளிகளின் கைகளில் மனமுவந்து ஒப்படைத்து விடுவதாக முன் கூட்டியே வாக்குறுதியளிக்கின்றேன். அது தெளிவானது என நான் எதிர்பார்க்கின்றேன், உங்கள் அனைவருக்கும் கேட்டதா? நான் இந்தப் பிரகடனத்தை முழு உலகின் முன்னிலையில் விடுக்கின்றேன்; எமது பூலோகத்தின் தூர மூலைகளிலும் எனது வார்த்தைகளை பிரசுரிக்கும்படி நான் பத்திரிகைகளை வேண்டுகின்றேன். ஆனால் ஆணைக்குழு — உங்களுக்கு கேட்கின்றதா — இந்த மாஸ்கோ வழக்குகள் நனவானதும், முன்கூட்டுட்டே [illegible] செய்யப்பட்ட பொய் வழக்குகள் எனவும், மனித எலும்புகளையும் நரம்புகளையும் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட தெனதினைநாட்டுமாயின் என்னை குற்றஞ் சாட்டுபவர்கள் தம்மை சுயமாக ஒரு துப்பாக்கி கும்பலின் முன் தம்மை நிறுத்த வேண்டும் என நான் கோரப்போவதில்லை. இல்லை, மனித, சந்ததிகளின் நினைவுகளில் படிந்து போயுள்ள நிரந்தரமான அவமானம் அவர்களுக்கு போதுமானது; கிரெம்ளினின் குற்றச் சாட்டுபவர்களுக்கு நான் சொல்வது கேட்கிறதா? எனது எதிர்ப்பினை அவர்களின் முகங்களில் விட்டு அடிக்கின்றேன். அத்தோடு நான் அவர்களின் பதிலுக்கு காத்திருக்கின்றேன்"

அனைத்துலக ஆணைக்குழு, புகழ் பெற்ற அமெரிக்க கல்வியாளரும், தத்துவவாதியுமான ஜோன் டூவேயின் தலைமையில் கூட்டப்பட்டது. 1937 ஏப்ரலில் இது ட்ரொட்ஸ்கியை பகிரங்கமாக விசாரிக்க மெக்சிகோவுக்கு பயணமானது. 1937 செப்டம்பரில் ஆணைக்குழு, ட்ரொட்ஸ்கி குற்றவாளி அல்ல வெனவும் மொஸ்கோ வழக்குகள் பொய் புனை வழக்கு என முத்திரை குத்தியது;

50 ஆண்டுகளின் பின்னர் மொஸ்கோ வழக்குகள் சோவியத் ஆட்சியாளர்களால் தள்ளி வைக்கப்பட்டமை, அதிகாரத்துவத்தை பீடித்துக் கொண்டுள்ள மோசமான அரசியல் நெருக்கடியின் நேரடியான வெளிப்பாடாகும். அதிகாரத்துவத்தின் உள்ளே மூர்க்கமான கோஷ்டி சண்டைகள் வெடித்துள்ளன. தனி நாட்டில் சோசலிசம் என் கொள்கையால உருவான பொருளாதார இக் கட்டான நிலையே இதற்குக் காரணம். கொர்பச்சேவ் அந் நெருக்கடிக்கு அதிகாரத்துவத்தின் அனைத்து நலன்களையும் காக்கும் விதத்தில் ஒரு தீர்வினைக் காண முயல்கின்றார். அவர் சோவியத் பொருளாதாரத்தை உலக முதலாளித்துவத்தினுள் இணைப்பதற்கு இட்டுச் செல்கின்றார்.

இந்த கொள்கைகளின் அடிப்படையில் அவர் அதிகாரத்துவத்தினுள் உள்ள பரந்த போக்குக்கள் உட்பட்ட மத்தியதர வர்க்கத்தின் பெருமளவிலான பகுதியினரை கவர்ந்து வருகின்றார். தனியார் சொத்துக்களையும் முதலாளித்துவ நிறுவனங்களையும் சட்டரீதியாக்குவதன் மூலம் அவர்களின் சொந்த சமூக அந்தஸ்தை பலப்படுத்த பார்க்கின்றார். அதிகாரத்துவத்தின் சில பிரிவினரின் சலுகைகளுக்கான மூலமாக விளங்கும் அரச கைத்தொழிலை தாக்குவதன் மூலமும், பரந்த மக்களாதரவை திரட்டிக் கொள்ளும் பொருட்டும் கொர்பச்சேவ், ஸ்டாலினின் முழு வரலாற்றுச் சாசனத்தின் மீதும் அப்பட்டமான தாக்குதல் நடாத்தத் தள்ளப்பட்டுள்ளார். கொர்பச்சேவின் இலக்குகள் எதுவும் அடிப்படைக் கொள்கை மாற்றத்தை அல்ல. ஏழு மாதங்களுக்கு முன்னர், அக்டோபர் புரட்சியின் 70 ஆண்டு நிறைவு குறித்த தமது பேச்சில் கொர்பச்சேவ் சோவியத் யூனியனுக்கு ஸ்டாலினின் பங்களிப்புக்களைப் புகழ்ந்து பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஸ்டாலினை அடியோடு கண்டனம் செய்வதாக உள்ளது, அத்தோடு வெகு விரைவில் ஸ்டாலின் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து இறந்த பின்னரும் தூக்கி வீசப்படலாம் என்ற செய்திகளும் வந்துள்ளன;

உண்மையில் உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கை வெகு தூரம் செல்வதோடு, கொர்பச்சேவ் நவம்பரில் கூறியவற்றுடனும் முரண்பட்டுக் கொள்கின்றது. இவை ஆழமான வரலாற்றுப் போக்கினை வெளிப்படுத்துகின்றன. பழம் போல்ஷிவிக்குகளுக்கு புனர்வாழ்வு அளித்தமை அக்டோபரின் வரலாற்று முன் நோக்குக்கும் சோவியத் பாட்டாளிகளிடம் இருந்து அரசியல் அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்ட அதிகாரத்துவத்துக்கும் இடையேயான சமன் செய்ய முடியாத குரோதத்தினை மிகவும் அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளது. ட்ரொட்ஸ்கியின் ஜீவியகால ஆக்கங்கள் நான்காம் அகிலத்தின் ஸ்தாபித்தலில் உள்ளடங்கியுள்ளன. அது அக்டோபர் புரட்சியின் உலகளாவிய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

அதிகாரத்துவத்தினால் அந்தப் புரட்சி அசுத்தப்படுத்தப்

★ 8ம் பக்கம் பார்க்கவும்

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியன் மொஸ்கோ பொய் வழக்கு...

7ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுள்ளதேயன்றி அழிக்கப்படவில்லை. புரட்சியின் தலையெழுத்து ஸ்டாலினால் வஞ்சிக்கப்பட்டவர்களின் வரலாற்று தலைவிதியுடன் பிரிக்கமுடியாத விதத்தில் பிணைக்கப்பட்டுள்ளது. ட்ரொட்ஸ்கி வலியுறுத்தி வந்ததுபோல், புரட்சி, வெகுஜனங்களின் நனவினில் உயிர் வாழ்கின்றது. வரலாற்றுப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டதும் அவை புரட்சிக்கும், பாட்டாளி வர்க்க அரசின் நிர்மாணத்துக்கும் பங்களிப்புச் செய்த இலட்சோப இலட்சம் தொழிலாளர்களின் உயிர்களுடன் மோதிக் கொள்கின்றன. அதிகாரத்துவத்தின் களையெடுப்புக்களாலும் அத்துடன் தொடர்புடைய குற்றங்களாலும் எத்தனை இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் தமது பெற்றோர்களையும் மூதாதையர்களையும் பறி கொடுத்தனர்? அவர்கள் உயர் நீதிமன்றத்தின் உத்தியோக பூர்வமான அறிக்கையின் உள்ளடக்கத்துடன் நின்றுவிட மாட்டார்கள். அவர்கள் மேலும் மேலும் அறிய வேண்டும் எனக் கோருவர். அவர்கள் அரசியல் ரீதியில் பழிக்குப் பழிவாங்கவே செய்வர்.

மேலும் புனர் வாழ்வழிப்பானது எண்ணற்ற கேள்விகளை எழுப்புகின்றது. இவற்றிற்கு கொர்பச்செவ் குழுவினாலோ அல்லது அவரின் எதிராளியாகக் காட்டிக் கொள்ளும் லிகச்சேவினாலோ பதிலளிக்க முடியாது. கொர்பச்சேவ் இந்த புனர் வாழ்வழிப்புக்களைக் கொண்டு தனது கரங்களைப் பலப்படுத்தலாம் என எதிர்பார்க்கின்றார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவர் லெனினின் மத்திய குழுவின் பழம் போல்ஷிவிக்குகளை காட்டிலும் ருஷ்ய வைதீக திருச்சபையின் பழம் தலைநகர் வாசிகளையே அதிகமதிகமாக புனர்வாழ்வு அளிப்பார். இறுதியில் இன்று நடைமுறையில் உள்ள போக்கானது கொர்பச்சேவுக்கு ஆபத்தானது எதிர்வந்து கொண்டுள்ள தொழிலாளர்களுடனான மோதல்கள் உருவாகும் நிலைமைகளின் கீழ் அதிகாரத்துவம் புரட்சிகர எதிர்க்கட்சியை நாசமாக்க ஸ்டாலின் பாவித்த பயங்கரமான பொய்மைப் படுத்துதலை தொடர்ந்தும் கையாள முடியாது.

கடந்த வாரச் சம்பவங்கள் வரலாற்று விதிகள், பெரும் சக்திவாய்ந்த பொதுச் செயலாளரைக் காட்டிலும் பலம் வாய்ந்தவை என்ற ட்ரொட்ஸ்கியின் கருத்தின் சரியான தன்மையை ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளன. சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் ஸ்டாலினின் சடலம் கல்லறையில் இருந்து அகற்றப்பட்டது. அவரின் மரணத்தின் பின்னர் இன்று அவரை சோவியத் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியில இருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. ஸ்டாலினிச கொலையாளிகளுக்குப் பொருத்தமான தண்டனையென ட்ரொட்ஸ்கி அன்று பிரேரித்தவை இன்று யதார்த்தமாகி வருகின்றது: ''கொலையாளிகளை மனித இனத்தின் மனச்சாட்சியின் முன்னால் நிர்வாணமாக்கி அவர்களை வரலாற்றின் ஊத்தைவாளிக்குள் வள்ளுவதே பணியாகும். இதற்குக் குறைந்ததற்கு ஒருவரை இணங்க வைப்பது முடியாத காரியம்''.

'வேர்க்கஸ் லீக்கோ' அல்லது அனைத்துலக குழுவைச் சேர்ந்த எமது சக சிந்தனையாளர்களோ நாம் கொர்பச்சேவை பற்றி எழுதியவற்றில் இருந்து பின் வாங்கப் போவதும் இல்லை. அவரின் சமூக வேலைத் திட்டத்தின் எதிர்ப்புரட்சித் தன்மை பற்றிய மதிப்பீட்டினை எந்த விதத்திலும் திருத்திக் கொள்ளப் போவதும் இல்லை.

உண்மையில் கொர்பச்சேவ் தமது 'பெரெஸ்ரொய்கா' (மறு நிர்மாணம்) கொள்கையினாலேயே தமது அதிகார உச்சிக்கு ஏறிக் கொண்டுள்ளார். இது சோவியத் அதிகாரத்துவத்தின் உள்ளிருக்கும் சக்திவாய்ந்த முதலாளித்துவ புனர் நிர்மாணப் போக்குக்களின் நலன்களை நனவாகவும், உறுதியாகவும் காட்டுகின்றது.

அதிகாரத்துவத்தின் சகல குழுக்களுக்கும் இடங்கொடாத எமது எதிர்ப்பானது, தொழிற்பட்டு வரும் புறநிலையான வரலாற்றுப் போக்கின் ஆழ்ந்த முக்கியத்துவத்தை அடையாளங் காண்பதில் இருந்து எம்மை தடை செய்யவில்லை. வங்குரோத்தடைந்த ஆட்சியாளர்களின் ஆளும் வட்டங்களில் ஏற்படும் அரசியல் வெடிப்புக்கள், வரலாற்றில் புரட்சிகரச் சக்திகளின் இயக்கங்களுக்கு கதவைத் திறக்கும் முதல் தடவை இதுவல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக 14ம் ஜூலை 1789ல் எந் நேற்ல் ஜெனரலை அழைத்தான்

ட்ரொட்ஸ்கியின் விவகாரம் பல தசாப்தங்களின் பின்னர் வரலாற்று அரங்கின் முன்னணிக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது. ட்ரொட்ஸ்கியாலும், பழம் போல்ஷிவிக்குகளாலும் படுகொலையின் பின்னணியில் அக்டோபா புரட்சியினதும் உலக சோசலிச வேலைத் திட்டத்தினதும் காட்டிக்கொடுப்பு உள்ளது. அந்த வேலைத்திட்டம் மட்டுமே அதன் ஒரு இணைந்த பாகமாக ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிரான அரசியல் புரட்சியை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. சோவியத் யூனியன் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு இதனாலேயே பதிலளிக்க முடியும்.

பழம் பால்ஷிவிக்குகளுக்கு புனர்வாழ்வு அளித்ததன் மூலம் எழுப்பப்பட்டுள்ள வரலாற்று விவகாரங்களுக்கு பகிரங்கமாக குரல் கொடுப்பதன் மூலம் ''வேர்க்கஸ் லீக்'' சோவியத்தினதும், அனைத்துலக பாட்டாளி வர்க்கத்தினதும் அடுத்த கட்ட எதிர்த் தாக்குதலை தயார் செய்வதில் அனைத்துலக குழுவுடன் இணைந்து கொள்கின்றது.

சுருங்கச் சொல்லின், எமது கட்சி தொழிலாளர் வர்க்கம் பக்கம் திரும்பி, எதிர் எதிர்காலத்துக்கு தயார் செய்வதால் நாம் ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து ஓட்டம் பிடித்த ஜெரி ஹீலி போன்ற பிரித்தானிய சந்தர்ப்பவாதிகள் வரலாற்றின் சகல படிப்பினைகளையும் மறந்து கொர்பச்சேவின் வண்டியில் ஏறிக் கொண்டு அவரின் அதிகாரத்துவ சூழ்ச்சிகளை வெகுஜனங்களின் புரட்சிகரத் தொடக்கி வைப்புக்களுக்குப் பதிலீடாக ஏற்றுக் கொள்வதை நாம் கண்டிக்கின்றோம்.

30 ஆண்டுகளுக்கு சற்று முன்னர் குருச்சேவ் தமது ''இரகசிய பேச்சில்' ஸ்டாலினை கண்டித்ததை தொடர்ந்து பப்லோவாதிகள் இந்த சம்பவத்தை தூக்கிப் பிடித்த வண்ணம், சோவியத் அதிகாரத்துவம் முற்போக்கு சுய சீர்திருத்தத்தை' அமுல் செய்ய இலயக்கானது என்ற தமது சந்தர்ப்பவாத கோட்பாடு ருசுப்படுத்தப்பட்டு விட்டதாக காட்டப் பார்த்தனர், ஆனால் இதிலிருந்து சரியாக 8 மாதங்களுக்குள் குருச்சேவ் புடாபெஸ்ட் தொழிலாளர் கிளர்ச்சியை அடக்க ஹங்கேரிக்குப் படைகளை அனுப்பியதன் மூலம் இந்த திரிபுவாதிகள் அரசியலில் நிர்வாணமாகினர்.

மார்க்ஸிஸ்டுகள் எதிர்கொண்டுள்ள பணி, நான்காம் அகிலத்தின் சுயாதீனமான புரட்சிகர வேலைத்திட்டத்தினை ஏற்பட்டுள்ள நெருக்கடியை சாதகமாக்கிக் கொள்வதே.

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் உயர் நீதிமன்ற புனர்வாழ்வின் அற்பமான விதிமுறைகளுடன் நின்றுவிடப் போவதில்லை. இது ட்ரொட்ஸ்கியையும், செடோவையும் உள்ளடக்கத் தவறியதுடன் மட்டுமன்றி பொய் புனை வழக்குகள் அநியாயமான கொலைகளின் நிச பொறி முறைகளின் மேல் இது எவ்விதமான வெளிச்சமும் பாச்சவில்லை.

ஒழித்துக் கட்டல்கள் தொடர்பான சகல உண்மைகளையும் அறியத் தர வேண்டும் என நாம் கோருகின்றோம். வழக்குகளுக்கு சதி வகுத்தது யார்? குற்றவாளிகளிடம் இருந்து பொய்யான ஒப்புதல் வாக்கு மூலங்களை கறப்பதை மேற்பார்வை செய்தது யார்? என்னவிதமான சித்திரவதைகள், உளவியல், உடலியல் நடவடிக்கைகள், மூலம் பிரதிவாதிகள் பலாத்காரமாக விசாரணை செய்யப்பட்டனர்? குற்றவாளிகள் எப்படிக் கொல்லப்பட்டனர் அவர்களின் கொலை அமுல் செய்தது யார்?

இரகசிய விசாரணைகளின் மூலம் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ட்ரொட்ஸ்கிஸ்டுகள் உள்ளடங்கலான ஒழித்துக் கட்டலுக்குப் பலியான சகலரதும் தலைவிதியையும் நாம் அறிய வேண்டும் எனக் கோருகின்றோம்.

சோவியத் ருஷ்யாவுக்கு வெளியே லியோன் ட்ரொட்ஸ்கி படுகொலை உட்பட, நான்காம் அகிலத்தின் அங்கத்தினர்களின் படுகொலைகளுடன் தொடர்புடைய சகல உண்மைகளையும் அறியத் தர வேண்டும் என நாம் கோருகின்றோம். ஜீ. பீ. யூ. ஏஜன்டுகள் யார்? படுகொலைக்கு தயார் செய்வதற்கு உதவ நான்காம் அகிலத்தின் பகுதிகளுக்குள் தொழிற்பட்டவர்கள் யார்? இன்னமும் சான் பிரான்சிஸ்கோவில் வசிக்கும் ஜீ பி.யூ. ஆத்திரமூட்டும் ஏஜண்ட் மார்க் ஷப்ரோப்ஸ்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய சகல உண்மைகளும் அம்பலமாக்கப்பட வேண்டும். இது ஸ்டாலின் ஏஜன்ட் சில்வியா பிராங்கிளினின் நடவடிக்கைகளுக்கும் பொருந்தும். இன்று இவள் சிக்காகோவில் சில்பியா டொர்சி என்ற பெயருடன் வாழ்ந்து வருகிறாள். இவள் 1938—1947க்கும் இடைப்பட்ட ட்ரொட்ஸ்கிச சோசலிச தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகரும், செயலாளருமான ஜேம்ஸ் பீ. கனனின் செயலாளராக தொழிற்பட்ட வேளையில் உளவு பார்த்தாள்

கடந்த தசாப்தத்தின் போது ஷப்ரோவ்ஸ்கி, பிராங்கிளினின் குற்றங்களை அம்பலப்படுத்திய வேளை அனைத்துலகக் குழு சோசலிச தொழிலாளர் கட்சியின் மற்றுமோர் தலைவரான காலஞ்சென்ற ஜோசப் ஹன்சனின் குற்றச் சாட்டு பற்றிய சாட்சிகளையும் கண்டு பிடித்தது. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினால் இழைக்கப்பட்ட குற்றங்களின் முழு பரிமாணத்தையும் ஒரேயடியாக அம்பலமாக்கும் பொருட்டு ஜீ.பி யூ.–கே.ஜீ.பி. கோவைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என நாம் கோருகின்றோம்.

மேலும் லியோன் ட்ரொட்ஸ்கியின் ஆக்கங்கள் ருஷ்ய மொழியில் பிரசுரிக்கப்பட்டு சோவியத் யூனியன் பூராவும் உள்ள நூல் நிலையங்கள், புத்தக சாலைகளில் வைக்கப்பட வேண்டும்.

இறுதியாக நாம் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்கு கோரிக்கைகளை வழங்குகின்றோம்: இது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மாஸ்கோ பொய் வழக்குகளும் அதனுடன் தொடர்புடைய குற்றங்களுக்கும் அரசியல் ஆதரவு வழங்கியதோடு மட்டுமன்றி அதன் அநேக அரசியல் படுகொலைகளில் நேரடி சகபாடியாகவும் தொழிற்பட்டது. இன்றைய கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களில் அதன் 78 வயது பொதுச் செயலாளர் இஸ் ஹோல் உட்பட ஸ்டாலினின் படுகொலைகளை கரகோஷத்துடன் வரவேற்றதோடு, ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு எதிராக 'பாசிஸ்டுகள்' என்ற சேறடிப்பிலும் ஈடுபட்ட அங்கத்தினர்கள் உள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சி இந்த நாற்றம் எடுத்த முழு மரபுகளை நிராகரிக்க வேண்டும் எனவும், தொழிலாளர் இயக்கத்தில் ஸ்டாலினிசத்தின் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநியாயங்கள் பற்றி இது அறிந்த அனைத்தையும் அம்பலப்படுத்த வேண்டும் எனவும் நாம் கோருகின்றோம்.

ஸ்டாலினிசத்தின் நெருக்கடி, கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஏகாதிபத்தியம் தனது உயிர் வாழ்வுக்கு சார்ந்திருந்த முக்கிய ஆதாரத்தைப் பாதித்துள்ளது.

இந்த நெருக்கடி, 'வேர்கஸ் லீக்'க்கும் அனைத்துலகக் குழுவுக்கும் அமெரிக்க, அனைத்துலக தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமை நெருக்கடியை தீர்ப்பதற்கான மாபெரும் சந்தர்ப்பத்தை வழங்கும் அதே சமயம், மாபெரும் கடமையையும் சுமத்துகின்றது. அந்த விதத்தில் உலக சோசலிசத்துக்கான இறுதி வெற்றியை தயார் செய்கின்றது.

1988 ஜூன், 16

**ஆசிரியர் குறிப்பு**

'தொழிலாளர் பாதை' அச்சகத்தில் ஏற்பட்ட சில தொழில் நுட்ப தடங்கல்களால் பத்திரிகையை உரிய காலத்தில் வெளியிட முடியாது போனமையையிட்டு வருந்துகின்றோம். நடுப் பக்கங்களில் இப்பத்திரிகையின் திகதியை ஜூலை 15 என திருத்தி வாசிக்கவும்.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# தோட்ட தொழிலாள இளைஞரை விடுதலை செய்!
# தோட்ட தொழிலாளரின் குடியுரிமைக்கு போராடு!

**நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டு உள்ள தோட்டத் தொழிலாள இளைஞர்களை மீட்பதற்காகவும், தோட்டத் தொழிலாளர்களின பிரஜாவுரிமைக்காக போராடவும அனைத்து தொழிலாள வர்க்க இயக்கத்தை உடனடியாக அணிதிரட்டுவது அவசியம்.**

தற்போது 160 க்கு அதிகமான தோட்டத் தொழிலாள இளைஞர்கள் மகசின், பூசா, போகம்பரை சிறைகளிலும், பல்வேறு பொலிஸ் சிறைகளிலும், இரகசிய பொலிசின் சித்திரவதைச் சாலைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் பலர் நான்கு வருடங்களுக்கு மேலாக இச் சிறைகளில் சித்திரவதைகளுக்கு த்தியில் வாழ்கின்றனர்.

இவர்களை சிறைபிலிட பிரசித்தமான பயங்கரவாத தடை சட்டமும், அவசர கால ட்டமும் உபயோகிகப்பட்டுள்ளது. சிலருக்கு, தமிழ் விடுதலை இயக்கத்துடன் சம்பந்தம் உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டும். மற்றவர்கள் குற்றச் சாட்டு எதுவும் இன்றி "சந்தேகத்தின்" பேரில் சிறை வைக்கப் ட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு உள்ளனர்.

யூ. என், பி. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து உள்ள இப்பாரிய ஒடுக்குமுறையானது சகல தொழிலாள — ஒடுக்கப்பட்ட மக்களை இராணுவ — பொலிஸ் ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் திட்டத்தின் ஒரு அம்சமாகும். இது இந்திய பிற்போக்கு காங்கிரஸ் ஆட்சியாளர்கள் 150,000 துருப்புக்கள் மூலம் தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்தலுடனும்' யூ. என். பி. அரசாங்கம் மற்றைய பகுதிகளில் கொலைகார படைகளினூடாக முன்னெடுத்துச் செல்லும் ஒடுக்குமுறையுடனும் நேரடியாக இணைந்துள்ளது

தமிழ் விடுதலை போராளிகளின் தாக்குதலின் முன் தடுமாறி வீழ்ந்துள்ள சிறீலங்கா முதலாளித்துவ ஆட்சியாளர்கள், தற்போதைய உலக நெருக்கடியின் மத்தியில் தவிர்க்க முடியாத படி தொழிலாள வர்க்கம் கிளர்ந்து எழுவது சம்பந்தமாக பீதி அடைந்துள்ளனர். அம் முறையான வர்க்க எழுசி யின் பலம் வாய்ந்த கேந்திரமாக திகழும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் இருக்கும் (பாராளிகளை முன் கூட்டியே வேட்டையாடவும். ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான பிரஜாவுரிமை இல்லாத தொழிலாளர்களை இந்தியாவின் பட்டினி முகாம்களுக்கு அனுப்பவும் நடவடிக்கைகள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் யூ. என். பி. அரசாங்கம் உக்கிரப்படுத்தியும் உள்ளது இதனாலேயே ஆகும்.

இலங்கை தொழிலாள வர்க்கத்தின் முதுகெலும்பாகிய தோட்ட தொழிலாளர் சம்பந்தமாக நாற்றமெடுத்துள்ள ... ந்நாட்டு வர்க்கம் நிரந்தரமாக கூட்டும் ... திலை 1948 ல் சுதந்திர அரசு என்பதை நிலைநாட்டியவுடன் அத்தொழிலாளரின் பிரஜாவுரிமையை ரத்து செய்ததன் மூலம் வெளிக்காட்டியது.

அன்று தொழிலாள வர்க்கத்தின் அபிவிருத்தியடைந்த பகுதியும், அதன் முன்னணியான போல்ஷிவிக் லெனினிஸ்ட கட்சியும், சேனநாயக்க — பண்டாரநாயக்க — ஜயவர்தன — பொன்னம்பலம் கும்பலால் கட்டவிழ்க்கப்பட்ட இப்பிற்போக்கு தாக்குதலானது சகல தொழிலாளர் — ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான தாக்குதலின் ஆரம்பம் என சரியாக கண்டு அதற்கு எதிர்ப்பு காட்டியது. 1948 ம் ஆண்டில் ஏகாதிபத்தியவாதிகளுடன் சூழ்ச்சி செய்து நாட்டப்பட்ட முதலாளித்துவ அரசை கவிழ்த்து தொழிலாள வர்க்கத்தை ஆட்சியதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் போராட்டத்தின் ஓர் அடியாக இவ்வெதிர்ப்பு விளங்கியது.

சமசமாஜ — ஸ்டாலினிச நவசமசமாஜ தலைமைகள் இன்று இந்த தொழிலாள வர்க்க கொளகைக்கு முற்று முழுதாக எதிராக விளங்குகின்றார்கள். இன்று அவர்கள் தோட்ட தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கு


★ 2 ம் பக்கம் பார்க்கவும்



கைது செய்யப்பட்ட தோட்ட இளைஞர்கள்


## Subscribe to Fourth International


"Fourth International" is the quarterly magazine of the International Comittee of the Fourth International.




single issue DM 10,-

single issue DM 18,-
Subscription DM 50,-

Order from
**Arbeiterpresse Verlag**
Alfredstr. 71
D-4300 Essen 1
West Germany




This pamphlet can be ordered from

**Neue Arbeiterpresse**
Alfredstr. 71
D-4300 Essen 1
West-Germany

Pour commander, écrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13

Please pay DM 1,50 + DM 0,50 postage
to account no. 211 85 – 431, Postgiroamt Essen


படிப்பகம்

www.padippakam.com



# தோட்டத் தொழிலாள இளைஞரை . .

[முன் பக்கத் தொடர்ச்சி]

வது "இந்நாட்டின் பொருளாதாரத்திற்கும், ஜனத்தொகைக்கும் தாங்க முடியாத பாரமாகும்" என வெளிப்படையாக குரலிட்ட சிறீலங்கா மக்கள் கட்சியின் பிற்போக்கு முதலாளிகளுடனும் கொலைகார இந்திய — இலங்கை ஒப்பந்தத்துடனும் ஒன்று சேர்ந்துள்ளனர்.

இத்துரோக தலைமைகள் 1964 ம் ஆண்டில் கேவலமான இனவாத சிறீலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து தோட்ட தொழிலாளர்களுக்கு எதிரான சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தை அங்கீகரித்து தொழிலாளரை காட்டிக் கொடுத்ததன் அடிப்படையில் தொழிலாளர் மத்தியில் தனது அதிகாரத்தை வளர்த்துக் கொண்ட எஸ். தொண்டமான் இன்று யூ. என். பி. அமைச்சர் என்ற முறையில் இத்தொழிலாளருக்கு எதிராக வாளை ஏந்தியுள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன் தலவாகெலையின் நகர் மத்தியில் காலில் சுட்டு கைது செய்யப்பட்ட குமார் எனும் தொழிலாள இளைஞன் சம்பந்தமாக தலையிட கோரி தொண்டமானை சந்தித்த அவரின் தந்தைக்கு தொண்டமான் பின்வருமாறு கூறினார். "நீ உன் பிள்ளையை நன்றாக வளர்த்திருந்தால் அவனுக்கு இந்த கதி நேருமா?" ஏகாதிபத்தியத்தின் ஒரு அடிவருடியின் சரியான பதிலாகும்.

தொண்டமான் முதலாளித்துவ அரசிற்கும் அதன் மூர்க்கமான ஒடுக்குதலுக்கும் சேவை செய்வது வார்த்தையால் மட்டுமல்ல. கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை சந்தித்து பேசிய "தொழிலாளர் பாதை" நிருபர்களுக்கு அவர்கள் கூறியது என்னவென்றால் தொண்டமானின் ஆணையின் படி இ. தொ. கா. வாகனங்களிலும் அதிகாரிகள் இவ்விளைஞர்களை பிடித்து பொலிஸில் ஒப்படைத்தார்கள் என்பதேயாகும்.

உலக பொருளாதார நெருக்கடியின் பளுவை தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் மேல் திணிக்கும் முகமாக யூ. என். பி. அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் அழிவு வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாக தோட்ட தொழில்களை நாசப்படுத்துவதும் தோட்டத் தொழிலாளரை நாட்டிலிருந்து வெளியேற்றுவதும் விளங்குகிறது. இ. தொ. கா. தலைமைகள் அரசாங்கத்துடன் சேர்ந்து இக்கொலைகார திட்டங்களுக்கு உதவி வழங்குகின்றனர்.

இத்துரோகத் தலைமைக்கு எதிராக தோட்ட புறங்களில் ஆத்திரம் மூட்டும் எதிர்ப்புக்கள் படரத் தொடங்கியுள்ளன. சிறையிலிடப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்கள் 3000 பேர்கள் தலவாகெலையில், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் பூண்டனர். தோட்டப் பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் கைது செய்தல்களுக்கு எதிராகவும் ரசபடைகளின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் நிரந்தரமாக போராட்டங்கள் படருகின்றன.

இப்போராட்டங்களை தலைமைப்படுத்தவோ அல்லது சிதறடிக்கவோ முடியாது. இப்போராட்டங்கள் தொழிலாள வர்க்கம் போராடி தீர்க்க வேண்டிய பிரச்சினைகளையே பிரதிபலிக்கின்றது. இப்போராட்டங்களுக்கு ஒற்றுமையுடன் முகம் கொடுக்காவிடின் முதலாளித்துவ அரச படைகளின் வேட்டையாடுதலை தோட்டப் பகுதி இளைஞர்களுடன் முடிவு காணும். இதுவானது சகல தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்சினையாக உள்ளதென நாம் அழுத்திச் சொல்வது இதனாலேயே.

இ. தொ. கா. வின் தொண்டமான் — செல்லசாமி தலைமைகளின் காட்டிக் கொடுத்தலின் கோர தனத்தை உபயோகிக்கும் ஸ்டாலினிஸ்டுகள் செங்கொடி சங்கத்தின் ஊடாக தொழிலாளரை மக்கள் முன்னணியில் இணைக்க ஒரு பக்கம் வேலை செய்வதோடு மற்றைய புறத்தில் மத்தியவாதிகளும் குட்டி முதலாளித்துவ இயக்கங்களும் தோட்டப் புறத்தை ஊடுருவ தொடங்கி உள்ளது. இந்திய முதலாளித்துவத்தின் வால் பிடிகளாக மாறி விடுதலை போராட்டத்தை காட்டிக் கொடுத்த ஈரோஸ், ஈ. பி. ஆர். எல் எப்., டெலோ, புளொட் ஆகிய இயக்கங்கள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு உள்ளதோடு போலியான சிநேகிதத்துடன் தோட்டத் தொழிலாளரை அணுகுகின்றனர்.

அத்தோடு இ. தொ. கா யூ. என். பி. யுடன் இணைந்துள்ளதை அனுமதித்திருப்பதோடு "போராளிகளாக" தம்மை மாற்றி காட்டுவதற்காக தலவாகெலை இ. தொ. கா. தலைவர் பி. சந்திரசேகரம் போன்றவர்கள் முன் வந்துள்ளனர். தம்முடைய பிடியை தொழிலாளர்களின் மேல் வைத்திருக்க இவ்வகையான "போராளிகளும" மத்தியவாதிகளும் தனக்கு தேவை என்பதை தொண்டமான் நன்றாக உணர்ந்துள்ளார். ஜனவரி 1 ம் திகதி நடத்தப்பட இருந்த வேலை நிறுத்தத்தை தொண்டமான் ரத்து செய்ததை எதிர்த்த 3 இ. தொ. கா. பிராந்திய தலைவர்கள் உட்பட 9 தொழிலாளர்களை உடனடியாக சங்கத்தில் இருந்து நீக்கிய தொண்டமான் "உண்ணாவிரத வீரராக" இருக்கும் சந்திரசேகரன் போன்றவர்களை தம்முடைய துரோக தனத்தை மூடி மறைக்க உபயோகிக்கின்றார்.

தோட்ட பகுதி இளம் தொழிலாளரை பொலிசாருக்கு பிடித்துக் கொடுப்பதற்கு எதிராகவும், தொழிலாள போராளிகளை இ. தொ. கா. வில் இருந்து நீக்குவதற்கு எதிராகவும் போராடுவதற்கு இ. தொ. கா. அங்கத்தவர்கள் உடனடியாக முன்வர வேண்டும்.

பொலிஸ் ஒடுக்கு முறைக்கு எதிராகவும், பிரஜாவுரிமையை வென்றெடுக்கவும் தோட்டத் தொழிலாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம் ஏகாதிபத்திய கைப்பொம்மைகளான இந்திய உபகண்ட ஆட்சியாளரின் ஆட்சி அமைப்புக்கே சவாலாகும். இப்போராட்டத்திற்காக சகல தொழிலாளரையும் அணிதிரட்டுவது மிகவும் முக்கியமானது இதனாலேயே. இனவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை பிரிக்க பிற்போக்கு ஆட்சியாளர் திட்டும் திட்டங்களுக்கு எதிராக இந்திய உபகண்டத்தின் சகல தொழிலாளரின் வர்க்க ஒற்றுமையை ஸ்தாபிக்க வேண்டும். தற்கால உலக பொருளாதார நெருக்கடியின் தீவிரமடைதலுடன், சகல நாடுகளிலும் பிற்போக்கு ஆட்சியாளர்கள் திரிபுவாதிகளினதும், ஸ்டாலினிஸ்டுக்களினதும் உதவியோடு ஒவ்வொரு நாடுகளின் தொழிலாளர்களை மற்றைய நாடுகளின் தொழிலாளர்களுக்கு எதிராக தூண்டவும், ஒரே நாட்டிலுள்ள தொழிலாளரை இனவாத ரீதியில் மோதவைக்கவும் நனவு பூர்வமாக இயங்கி வருகின்றனர். தற்போதும் அமெரிக்க, பிரித்தானிய, பிரான்ஸ், ஜெர்மனி, அவுஸ்திரேலிய ஆட்சியாளர்கள் தத்தமது நாடுகளில் வேலை செய்து வரும் குடி புகுந்த தொழிலாளர்களுக்கு எதிராக சட்டங்களை கொணர்ந்து இக்கொலைகார கொள்கைகளை நடைமுறைபடுத்துகின்றார்கள். பிலிப்பின் பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் மத பேதங்களையும் இனவாதத்தையும் தூண்டி விடும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தியாவின் எல்லா பிராந்தியங்களிலும் முதலாளிகள் இம்முறையான பிற்போக்கு திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இப்பிளவு படுத்தலுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் உலக ஒற்றுமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க கூடியது தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் உலக சோசலிச புரட்சிக்காக போராடும் தலைமைக்கு மாத்திரமே.

சமசமாஜ — ஸ்டாலினிச இ. தொ. கா. — நவசமசமாஜ தலைமைகளினதும் மத்தியவாதிகளினதும் தேசியவாத இனவாத கொள்கைகள் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்தில் இணைத்து கசாப்பு படைக்கு தள்ளிச் செல்லும் கொள்கைகளே. தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்க ஒற்றுமையையும் சுயாதீனத்தையும் பேணி தொழிலாள வர்க்க ஆட்சி அதிகாரத்திற்காக போராடுவதன் மூலம் மட்டுமே தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதற்கு எதிராக, பிற்போக்கு தேசியவாதத்தில் தொழிலாளரை இறுக வைத்து எதிர்ப்புரட்சிக்கு கதவை திறக்க இயங்கும் மக்கள் முன்னணியில் குந்தியிருக்கும் சகல தலைமைகளையும் அனைத்துலக புரட்சிகர தலைமையின் ஊடாக மாற்றுவது தொழிலாள வர்க்கத்தின் வெற்றிக்காக இன்றியமையாதது. இப்புரட்சிகர தலைமையை கட்டியெழுப்புவதற்காக போராடுவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் மாத்திரமே.

தொண்டமான் தலைமைக்கு யூ என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறும், சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைமைகளை பிற்போக்கு மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறுமாறும் வற்புறுத்தி வர்க்க சுயாதீனத்தின் பதாகையின் கீழ் நகர்புற தொழிலாளரையும், தோட்ட தொழிலாளரையும் ஒன்றிணைத்து அணி திரட்ட சகல போராளிகளும் முன்வர வேண்டும். அத்தோடு இந்தியாவினுள் சி. பீ. ஐ., சி. பீ. ஐ எம். ஸ்டாலினிச தலைமைகளும் இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு இந்திய இராணுவ ஆக்கிரமிப்பிற்கும் அளிக்கும் ஆதரவை உடனடியாக நிறுத்துமாறு வற்புறுத்தும் பிரச்சாரத்தின் ஊடாக இலங்கையிலும், தமிழ் ஈழத்திலும், இந்தியாவிலும் கோடிக்கணக்கான தொழிலாளரை, இரு நாடுகளின் ஏகாதிபத்திய கைப்பாளான முதலாளித்துவ அரசாங்கங்களை விரட்டுவதற்காக சோசலிச வேலைத்திட்டத்திற்கான இந்திய உபகண்ட சோசலிச குடியரசை கட்டியெழுப்புவதற்காக அணி திரட்ட வேண்டும். இந்தியாவினுள் சோசலிச தொழிலாளர் கழகம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன இணைந்து இந்திய உபகண்டத்தினுள் இதற்காக போராடுகின்றது. இப்போராட்டத்தில் இணையுமாறு சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

- ★ தோட்ட பகுதி தொழிலாள இளைஞர்களை சிறையில் இருந்து விடுதலை செய்ய போராடு!
- ★ தோட்ட தொழிலாளரின் பிரஜாவுரிமையை பேணு!
- ★ தொழிலாளரை இந்தியாவின் பட்டினி முகாம்களுக்கு கடத்துவதற்கு எதிராக போராடு
- ★ சகல தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஆயத்தப்படுத்தும் இந்திய — இலங்கை இராணுவ சர்வாதிகாரத்தை முறியடிக்கும் வேலைத்திட்டத்தை அங்கீகரிக்க சகல தொழிற் சங்கங்களின் மகாநாடொன்றை கூட்டு!
- ★ சமசமாஜ — கம்யூனிஸ்ட — இ. தொ. கா. தலைமைகள் முதலாளித்துவ யூ. என். பி. சிறீலங்கா மக்கள் கட்சிகளுடன் நடாத்தும் மக்கள் முன்னணிகளை தகர்த்தெறிய வற்புறுத்து!
- ★ யூ என். பி. யை விரட்டு. சகல தோட்டங்களும் முதலாளித்துவ சொத்துடைமைகளும் நஷ்டஈடு வழங்காமல் தொழிலாளர் குழுக்களின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்துக்கு போராடும் தொழிலாளர் — விவசாய அரசாங்கத்திற்காக போராடு!
- ★ முதலாளித்துவ — பொலிஸ் — இராணுவம் — சிறைச்சாலைகளை ஒழி!
- ★ தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை பேணி சிறீலங்கா — தமிழ் ஈழம் சோசலிச குடியரசுக்காக முன்னேறு!
- ★ சோசலிச புரட்சியின் உலக கட்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை கட்டியெழுப்பு!
- ★ புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தையும் இந்திய சோசலிச தொழிலாளர் கழகத்தையும் கட்டி யெழுப்பு!

படிப்பகம்

www.padippakam.com



## சென்னையில் தோழர் கீர்த்தி பாலசூரியாவின் நினைவுக் கூட்டம்

# தோழர் கீர்த்தி மிகப்பெரும் பாட்டாளி வர்க்க சர்வ தேசிய போராளிகளில் ஒருவர்

—தோழர் பழனி உரை

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட டிராட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகம், அதனைக் கட்டுவதற்காக அயராது போராடிய ஒரு பாட்டாளி வர்க்க சர்வ தேசியவாதியும், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஒரு தலைவரும், இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளருமான தோழர் கீர்த்தி பாலசூரியாவின் புரட்சிகர வாழ்க்கையையும் வேலையையும் கௌரவிக்கும் முகமாக சென்னையில் மார்ச் 13, 1988ல் பெரம்பூர் பொம்மைக் கல்யாண மண்டபத்தில் ஏற்பாடு செய்த கூட்டத்தில் தொழிலாளர்களும், இளைஞர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு தோழர் பழனி தலைமை தாங்கினார். கூட்டத்தின் ஆரம்பத்தில் தோழர் கீர்த்திக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில் தலைவர் பழனியின் உரையை தொடர்ந்து அருண்குமாரும் இறுதியாக சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் ஸ்தாபக உறுப்பினரான லாரன்சும் உரையாற்றினார்கள்.

தோழர் பழனி, கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் வரவேற்றார். அதைத் தொடர்ந்து அவர் தலைமை உரை ஆற்றினார்:

தோழர் கீர்த்தி பாலசூரியா, அவருடைய பள்ளிப்பருவத்தில், 16 வயதில் புரட்சிகர அரசியலில் ஈடுபட்டார். அன்று முதல், அவரது கடைசி மூச்சு உள்ள வரை, சிறிதும் விட்டுக் கொடுப்பின்றி மார்க்சிசத்திற்காக போராடினார். 1964ல் இலங்கையில் சமசமாஜக் கட்சியின் மாபெரும்காட்டிக் கொடுப்புக்கு எதிராக, நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தலையீட்டினால் உருவாக்கப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராக 19 வயதில் பொறுப்பேற்றார். தோழர் கீர்த்தியின் போராட்டம் இலங்கைத் தீவுக்குள் மட்டுப்படுத்தப் படவில்லை. அவர் உலகத் தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடியை தீர்ப்பதில்தீர்க்கமான பங்கு வகித்தார். பாப்லோவாத திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் முழு படிப்பினையையும் உறிஞ்சி எடுத்தார்.

1971ல் பங்களாதேஷில் இந்திய ராணுவத் தலையீட்டை ஆதரித்து பண்டா எடுத்த நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்தார். இந்திய முதலாளித்துவத்தின் ராணுவம் அங்கு சென்றது அங்குள்ள தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் சார்பில் அல்ல, ஆனால் அதற்கு எதிராக அங்கு மீண்டும் முதலாளித்துவ ஆட்சி முறையை தக்க வைப்பதற்காகத்தான் என எச்சரித்தார். அந்த எச்சரிக்கை எவ்வளவு ஆழமானதும்,சரியானதும்என்று வரலாறு இன்று நிரூபித்துள்ளது. இன்று ஒரு லட்சத்திற்கும் அதிகமான இந்திய ராணுவம், தமிழ் ஈழத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை குரூரமாக முறியடிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. இதனை டண்டாவும், இங்குள்ள ஸ்டாலினிச கம்யூனிசக் கட்சித் தலைமைகளும் ஆதரிக்கின்றனர்.

இந்நிலையில் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை பேணவும் இந்திய ராணுவத்தை உடனடியாக வாபஸ் வாங்கவும், அதன் தோல்விக்காகவும் போராடும் ஒரே ஒரு அரசியல் இயக்கம் சோசலிசத் தொழிலாளர் கழகமாகும். இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமிழ் ஈழ, சிறிலங்க ஐக்கிய சோசலிச குடியரசுகள் என்ற புரட்சிகர முன்னோக்கின் அடிப்படையில் போராடுகிறது. தோழர் கீர்த்தி,குட்டி முதலாளித்துவ தலைமைகளின் திவாலான வேலைத்திட்டத்திற்கு எதிராக புரட்சிகர பாட்டாளி வர்க்க தலைமையின் கீழ் சோசலிசத்திற்கான போராட்டத்தையும், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்தையும் முன்னெடுக்கப் போராடினார்.

தோழர் கீர்த்தி பலவிதமான கஷ்டங்களின் மத்தியில், இந்தியாவில் ஒரு புரட்சிகர டிராட்ஸ்கிசக் கட்சியைகட்டுவதற்காக தொடர்ச்சியாகப் போராடினார். குறிப்பாக, நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவிலிருந்து வெளியேற்றப்பட்ட, அதன் முன்னைய பிரிட்டிஷ் பகுதியின் தலைவர்களான ஹீலி, பண்டா, சுலோட்டரின் பெரும் துரோகங்களுக்கு எதிராகப் போராடினார். W.R.P பிரிட்டிஷ் தேசியவாதத்திற்கு அடிபணிந்து, பாட்டாளி வர்க்கப்புரட்சிகர பங்கை நிராகரித்து, குட்டி முதலாளித்துவ தலைமைகளை மார்க்சிஸ்டுகளாக சித்தரித்த திரிபுவாதத்திற்கு எதிராக ஒர்க்கர்ஸ் லீக்கும், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவும் 1985 — 1987 நடத்திய போராட்டத்தில் தோழர் கீர்த்தி அந்த W.R.P. ஓடுகாலிகளை தோற்கடிக்க ஆக்ரோஷத்துடன் போராடினார்

பின்தங்கிய நாடுகளில் தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதன் மூலமே, அங்கு பூர்த்தி செய்யப்படாத ஜனநாயகப் புரட்சியின்கடமைகள் பூர்த்தியாக்கப்படும் என்ற டிராட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி தத்துவத்தைதையும், மேலும் நொறுங்கி வீழ்ந்து கொண்டிருக்கும் உலகப் பொருளாதார நெருக்கடியும், அதனால் ஏகாதிபத்தியங்களுக்கு இடையே வர்த்தக யுத்தமும், பின்தங்கிய நாடுகளின் திவாலான தன்மையும், சுரண்டலும், சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குமுறையும் அதிகரிக்கும் என்றும், இவை அனைத்துக்கும் இடையேயான உட்தொடர்புகளையும் ஆராய்ந்த கீர்த்தி எந்த ஒரு நாட்டிலும் அது தேசிய விடுதலைப் போராட்டம் என்றாலும் சரி, சோசலிசப்புரட்சிக்கான போராட்டமானாலும் சரி அது பாட்டாளி வர்க்க தலைமையின் கீழேயே பூர்த்தி செய்யப்படுமென்று தீர்க்கமாக எடுத்துரைத்தார்.

அதைத்தொடர்ந்துபேசிய தோழர் அருண்குமார், நிரந்தரப்புரட்சி தத்துவத்தை பேண தோழர் கீர்த்தி முன் எடுத்த போராட்டத்தைப் பற்றியும் தொழிலாளர் புரட்சி ஓடுகாலி சுலோட்டரின் பொய்களையும், திரித்துக்கூறுவதையும் தாக்கினார்.

தோழர் கீர்த்தியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தை புரிந்து கொள்ள, அவர் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்த விஞ்ஞான சோசலிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அறிந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில் மார்க்ஸ் காலம் முதல் இன்று வரைக்கும், விஞ்ஞான சோசலிசம் பலவிதமான திரிபுவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டுவருகிறது. அந்த திரிபுவாதங்கள் அடிப்படையில், தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல், தத்துவார்த்த ஆதிக்கத்தின் கீழ் உட்படுத்துவதையே அதன் சாராம்சமாக கொண்டதாகும். தொழிலாள வர்க்கம், அதன் உயர்ந்த வர்க்க நனவுடைய நடவடிக்கைகளினால் மட்டுமே தன்னை சுரண்டல் அமைப்பிலிருந்து விடுவித்து, தன்னை உற்பத்தி சாதனங்களின் எஜமானனாக்கி கொள்ள முடியும், தொழிலாள வர்க்கம், அதன் வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்ற கிளர்ந்து எழுவது, மார்க்ஸிய கோட்பாடுகளை சிறிதளவும் விட்டுக் கொடுக்காமல் போராடும் ஒரு புரட்சிக் கட்சியின் வழி காட்டல் இன்றி சாத்தியமற்றதாகும். இதற்கு அவசியமானது தொழிலாள வர்க்கம் மத்தியில் உள்ள சந்தர்ப்பவாத துரோகத் தலைமைகளுக்கும் மற்றும் குட்டி முதலாளித்துவ மிதவாத சாகஸவாத அரசியலுக்கும் எதிரான ஒரு நீண்ட, தொடர்ச்சியான ஈவிரக்க மற்றஅரசியல் தத்துவார்த்த போராட்டமாகும்'

தோழர் கீர்த்தியின் போராட்டம் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக சோசலிசப் புரட்சிக்கு தலைமை தாங்க வல்லமையுடைய ஒரே ஒரு தொடர்ச்சியான புரட்சிகர வர்க்கமான தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரவர்க்க நனவை உயர்த்துவதற்காக, பலவிதமான அழுத்தங்களுக்கு எதிராக விட்டுக் கொடுக்காமல் போராடி வந்ததாகும். அத்துடன் அவர் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஒருசிறந்த போராளியாகும் இருந்தார்,

தோழர் கீர்த்தியின் அரசியல் பரிணாமும், சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியை கட்டுவதற்கு அவர் ஆற்றிய பங்கும்,எமது சர்வதேச டிராட்ஸ்கிச இயக்கத்திற்குள் ஏகாதிபத்திய அழுத்தங்களுக்கு அடிபணிந்த பப்லோவாத திரிபுவாதத்திற்கு எதிரானபோராட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்

பப்லோவாதம், எதிர் புரட்சிகர ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் அரசியல், சமூக வளர்ச்சி பற்றிய டிராட்ஸ்கியின் ஆழமான ஆய்வை நிராகரித்தது மட்டுமல்லாமல்,சோசலிசப்புரட்சியானது தொழிலாள வர்க்க மத்தியில் நீண்ட, தொடர்ச்சியான மார்க்சியத்திற்கான போராட்டம் இன்றிசாத்தியமாகும் என்றது, அதாவது முதலாளித்துவத்தின் பிடியில் இருந்து தொழிலாளவர்க்கத்தின் அரசியல், தத்துவார்த்த சரீரரீதியான விடுதலை,குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் கெரில்லாவாதம் மூலம் அடையக் கூடியது என பப்லோவாதிகள் கூறினர்.

இந்த பப்லோவாதிகள் தான் இலங்கையில் 1964யில் இலங்கையில் லங்கா சமசமாஜக் கட்சி (L S. S. P), சிறிமாவோ பண்டார நாயக்காவின் (S. L. F. P.) கூட்டரசாங்கத்தில் சேர்வதை ஆதரித்தனர். இந்த மாபெரும் பப்லோவாத காட்டிக் கொடுப்புக்கு எதிராக நான்காம்அகிலத்தின் அனைத்துலக குழு தொடுத்த போராட்டத்தின் விளைவாக, 1966ல் அமெரிக்காவில் ஒர்க்கர்ஸ்லீக்கும், 1968ல் இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், அதைத் தொடர்ந்து சர்வதேச ரீதியாக மேலும் பல நாடுகளிலும், நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் பகுதிகள் கட்டப்பட்டன.

இங்கு நாம் நன்றாக கவனிக்க வேண்டியது—1964ல் சுமார் 70 லட்சம் உறுப்பினர்களை அதன் பரந்த இயக்கங்களில் கொண்டிருந்த லங்கா சமசமாஜக் கட்சி,உலகத்தில் மிகப் பெரும் டிராட்ஸ்கிச கட்சி என கருதப்பட்ட, (உண்மையில் அதுஒரு இடைநிலைவாத கட்சியாக அப்போது இருந்தது) அந்த பெரும் இயக்கத்திலிருந்து, தனிமைப்படுத்தப்பட்டு, விடுவோம் என்ற அச்சமின்றிஒரு சிறு குழுவினர் அதன் காட்டிக் கொடுப்பை கண்டித்து அதிலிருந்து வெளியேறி நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன்உறவு கொண்டு புரட்சிக்கர டிராட்ஸ்கிசத்திற்கான போராட்டத்தை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் என்ற அமைப்பின் மூலமாக முன்னெடுத்தனர்.

ஆம், அந்த சிறிய எண்ணிக்கை கொண்ட உண்மையான புரட்சிகர டிராட்ஸ்கிஸ்டுகள், அந்த பெரும் எண்ணிக்கையை கொண்டிருந்த இயக்கத்தின் துரோகத் தலைமையிலிருந்து தனிமைப்பட்டிருக்க விரும்பினர். அதே போல் நாம் பல்வேறு விதமான துரோகத் தலைமைகளிலிருந்து தனிமைப்பட்டு இருக்க விரும்புகிறோம். ஆனால் இதன் மூலம் தான் மார்க்ஸிய கோட்பாடுகளுக்காக தொழிலாள வர்க்க மத்தியில் பொறுமையாக இடைவிடாது, ஸ்டாலினிஸ்டுகளுக்கும்: சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக நடத்தும் அரசியல், தத்துவார்த்த போராட்டத்தின் மூலமாக இறுதியில் தொழிலாள வர்க்கத்தின் பெரும்பான்மையினரை நம் பக்கம் வென்றெடுக்க முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எமக்கு உண்டு. எனவே தொழிலாள வர்க்கத்தின் வரலாறறு கடமைகளை நிறைவேற்ற, அதனை தயார் படுத்தும் எமது இறுதி குறிக்கோளை அடைவதற்காக நாம் தற்காலிகமாக "தனிமைப்பட்டிருக்க" அஞ்சவில்லை.

இந்த தற்காலிக "தனிமைப்படுத்தலை" கண்டு அஞ்சிய, மற்றும்தொழிலாளவர்க்கத்தின் வரலாற்று புரட்சிப் பங்கைநிராகரித்த பொறுமை இழந்த குட்டி முதலாளித்துவ பகுதியினர் மிதவாத, சாகஸவாத அரசியலில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு ஆயுதப் போராட்டமே, அதி உயர்ந்த முன்னோக்காகமாறுகிறது. இவ்வாறான பகுதியினரை உலகின் பல பாகங்களில் நாம் பார்க்கிறோம். ஈழத்தில், தமிழ் முதலாளித்துவ தேசிய வாதிகள், இந்தியாவில் நக்சல் பாரிகள், 1949யில், நான்கு வர்க்க கூட்டுக் கொள்கையுடன் ஆட்சிக்கு வந்த மாவோசேதுங்குகள், கியூபாவில் காஸ்ட்ரோ களும் சேகுவாராக்களும் மேலும் பலரும் இந்த வகையருக்களே.

தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளான ஹீலி, பண்டா, சுலோட்டர்கள் ஏகாதிபத்திய அழுத்தங்களுக்கு அடிபணிந்து கேவலமான முறையில் டிராட்ஸ்கிச கோட்பாடுகளை காட்டிக் கொடுத்தற்கு எதிராக ஒர்க்கர்ஸ்லீக் தலைமையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பெரும்பான்மையினர் தொடுத்த போராட்டத்தில். அந்த ஓடுகாலிகளை முறியடிப்பதற்கான போராட்டத்தில் தோழர் கீர்த்தி தீர்க்கமான பங்கு வகித்தார்.

. நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு திவாலானது என பிரகடனம் செய்த பண்டா இன்று எங்கே? மிகஇழிவான முறையில் எதிர் புரட்சி ஸ்டாலினிசத்தை அரவணைத்துள்ளார். ஹீலி எங்கே? ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு எதிரான அரசியல்புரட்சியை நிராகரித்து, அதனுடன் குலாவுகின்றார்.

சுலோட்டர், ஸ்டாலினிசத்தின் மக்கள் முன்னணி கொள்கையை ஆதரிக்கின்றார். லண்டனில், தோழர் கீர்த்

★ 8ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com





## பந்த் — அவசர நிலை — ஸ்டாலினிசம்...

★3ம் பக்கத்திலிருந்து

அவர்களது பழைய எதிர் புரட்சி நிலைப்பாட்டை 'சுய விமரிசனம்' செய்வது, அவர்களின் ''தவறுகளை'' ஒரு கோட்பாட்டுரீதியான திருத்தம் செய்து விட்டனர் என அர்த்தப் படாது, ஆனால் அதிலிருந்து எவ்வளவோ தூரம் அப்பால் இருக்கிறது. ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள் வகுப்புவாத ரீதியில் துண்டாடப்பட்ட இந்திய உபகண்டப் பிராந்தியத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் என்ற வகுப்புவாத அரசுகளின் பிரதான பாதுகாப்பாளர்களாகவும் இந்நாடுகளில் உள்ள பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களின், உடந்தையாளர்களாகவும் இருக்கின்றனர். ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள் தமது கடந்த காலங்களைப் பற்றி 'சுயவிமரிசனம்' செய்து கொள்வது தொழிலாள வர்க்க மத்தியில் தொடர்ச்சியாக எதிர் புரட்சிப்பங்கை வகிப்பதற்காகும்.

ஜனசங், முஸ்லிம் லீக் போன்ற தீவிர வகுப்புவாத கட்சிகளுடன் தேர்தலில் வேலைத்திட்ட அடிப்படையிலான கூட்டை வைத்துக் கொள்வதில் சி.பி.எம் தலைமைக்கு எவ்வித பிரச்சனையும் இருக்கவில்லை. 1977யில் மத்தியில் ஜனசங்கத்துடனும், 1967இல் கேரளாவில் முஸ்லிம் லீக்குடனும், அதனுடன் 1969யில் 'முறித்துக்' கொண்ட பின் அதன் ஒரு குழுவினருடன் 1974யிலிருந்து 1986 வரை சி.பி.எம் தலைமை கூட்டு வைத்திருந்தது (பீப்பிள்ஸ் டெமாக்கிரசி, ஜனவரி 10, 1988, பக்கம் 3).

கடந்த வருட பிற்பகுதி வரை பாரதிய ஜனதாக்கட்சியும் (பி.ஜே.பி), முஸ்லிம் லீக்கும் வகுப்புவாத கட்சிகள் எனபுதை சி.பி.எம் தலைமை 'கண்டு பிடிக்கவில்லை'! அதற்குப் பின்னர் அக்கட்சிகளுடன் தொடர்ந்தும் எவ்வித தேர்தல் கூட்டும் வைப்பது இல்லை என தீர்மானித்தனர். இத்திருப்பத்திற்கான காரணம் கூர்மை அடைந்துவரும் வர்க்கப் போராட்டமாகும். பெரும்பான்மை தொழிலாள வர்க்கத்தினால் வெறுத்து ஒதுக்கப்படும் இப்படியான வகுப்புவாத கட்சிகளிடம் இருந்து தூரவிலகிச்செல்வது ஸ்டாலினிச தலைமைகளுக்கு தவிர்க்க முடியாத ஒரு சமரசமாகியது. மேற்கூறிய காரணங்களினாலேயே, அங்கொரு ''மதசார்பற்ற ஜனநாயக சக்திகள்'' என்ற ஒரு கபடதார அணியும் உருவாகியது.

இதனால் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள் தாம் வகுப்பு வாதத்தையும், பிரிவினையையும், எதிர்த்துப் போராடுவது என்பது ஒரு எரிச்சலூட்டும் கஞ்சலையாகும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் இந்தியப் பிரிவினையையும் போலியான அரச எல்லைகளையும் பாரதிய ஜனதா மற்றும் முஸ்லிம் லீக் கட்சிகளைப் போலவே ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளும் முழுமனதுடன் ஆதரிக்கின்றன.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா போன்ற வகுப்புவாத முதலாளித்துவ அரசுகளை அழித்து, மனம் இசைந்த முறையில் ஏகாதிபத்தியத்தால் பிளவு படுத்தப்பட்ட இந்திய உபகண்டத்தை மீண்டும், புரட்சிகர தொழிலாள வர்க்க ஐக்கியத்தின் அடிப்படையில் இணைக்கவும், சோசலிசத் தொழிலாளர் கழகம் கூறுகிறது; மேலும் ஒடுக்கப் படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும், தென் ஆசிய சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை, உலக சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தின் ஒரு பாகமாக அமைக்க கோருகிறது.


இந்து பேரினவாத ஒழுங்கு முறையும், இந்து, இஸ்லாம் அடிப்படையிலான அரசுகள் இருப்பதும், மற்றுமொரு மத அடிப்படையான அரசை - காலிஸ்தானை - உருவாக்கத் தூண்டுகிறது. காலிஸ்தான கோரிக்கை சீக்கிய தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு பொறிக்கிடங்காகும். வர்க்கப் போராட்டத்தையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் நிராகரிக்கும் குட்டி முதலாளித்துவ பகுதியினராலேயே அக்கோரிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

பிற்போக்கான காலிஸ்தான் கோரிக்கையை நிராகரிக்கும் படியும், ஏகாதிபத்தியத்தினாலும், தேசிய முதலாளித்துவ வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட வகுப்புவாத முதலாளித்துவ அரசுகளை தகாத்து எறிவதற்கான சோசலிச மற்றும் ஜனநாயக வேலைத் திட்டத்தின் கீழ் அணி திரளுமாறும் சீக்கிய தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் விவசாயிகளையும் சோசலிசத் தொழிலாளர் கழகம் கோருகிறது.

இந்து பேரினவாத ஆளும் வர்க்கத்தின் பிரதி நிதியான ராஜீவ் காந்தியின் 'தேசிய ஐக்கியத்திற்கான' அழைப்புக்கும் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள் கோரும் தேசிய ஐக்கியத்திற்கும் அடிப்படையில் எவ்வித வேறுபாடும் இல்லை. இது ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப் படுவோருக்கும் இடையில் ஐக்கியததை கோருகிறது. தொழிலாளர்கள் இந்த எதிர் புரட்சி ''ஐக்கியத்தை'' நிராகரித்து; சுரண்டுவோரையும், ஒடுக்குவோரையும் தோற்கடிக்க புரட்சிகர வேலைத் திட்டத்தின் கீழ் மொழி, மத, இன, வேறுபாடின்றி அணிதிரள வேண்டும்.

### இந்திய—சிறிலங்கா ஒப்பந்தம்

இந்தியாவிலும், இலங்கையிலும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஏகாதிபத்தியத்தாலும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினாலும் செய்யப்பட்ட ஏற்பாடுகளை (1947, 1948) அச்சுறுத்தும் வகையிலும், தொழிலாள ஒடுக்கப் படும் மக்களின் போராட்டங்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையிலும், அதிலும் குறிப்பாக சிறிலங்கா முதலாளித்துவத்துக்கு பிரமாண்டமான அரசியல, பொருளாதார, ராணுவ நெருக்கடியை உண்டு பண்ணி, தொழிலாள வர்க்கப் போராட்டத்தை மிகக் கூர்மை அடையச் செய்த, தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டத்தை குரூரமாக நசுக்கி ஒழிக்க வேண்டிய அவசியத்தை இந்தயா-சிறிலங்கா முதலாளித்துவ வர்க்கங்களும், உலக ஏகாதிபத்தியமும் உணர்ந்து கொண்டன. இந்த அடிப்படையில், தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் குட்டி முதலாளித்துவ தலைமைகளின் காட்டிக் கொடுப்புகளின் விளைவாக பிற்போக்கு இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் செய்யப் பட்டது. இந்த ஒப்பந்தம், இலங்கைத் தீவில் மீண்டும், சிங்கள இனவாத முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகாரத்தை, தமிழ் ஈழ பிராந்தியத்திலும், நாடு முழுவதும நிலை நாட்டுவதை குறிக்கோளாக கொண்டது. உலக ஏகாதிபத்தியத்தாலும, மாஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினாலும்போற்றி வரவேற்கப்பட்ட இந்த பிற்போக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றும் பணியில் ஒன்றரை லட்சத்துக்கும அதிகமான இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் தேசியவிடுதலை போராளிகளை துடைத்துக் கட்டும் வேலையில் மட்டுமின்றி கற்



பல்கலை கழக ஆசிரியர் களின் போராட்டம்

பழிப்பு, கொள்ளையடிப்பு, வீடுகளை தீமூட்டல் போன்ற ,'அமைதி காக்கும்'' பணிகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்!

இந்த பிற்போக்கு ஒப்பந்தத்தை தீவிரமாக ஆதரிக்கும் இரு நாடுகளையும் சேர்ந்த ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள், ஒரு கூட்ட றிசகை மூலம், இந்த ஒப்பந்தை அமுல்படுத்த தமது முழு ஒத்துழைப்பையும வழங்குவதாக அறிவித்தனர்.

இந்த பிற்போக்கு ஒப்பந்தத்தையும், ஸ்டாலினிச தலைமைகளின் எதிர் புரட்சிகர வேலைத்திட்டங்களையும அம்பலப்படுத்தி, தமிழ் ஈழத்திலிருந்து உடனடியாக அனைத்து இந்திய ஆக்கிரமிப்பு படைகளை வாபஸ் வாங்கவும், இந்திய — சிறிலங்கா—தமிழ் ஈழ தொழிலாள வர்க்கத்தின், புரட்சிகர ஐக்கியத்திற்காகவும் ஒடுக்கப்படும தமிழ் ஈழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் தொழிலாள, விவசாய அரசாங்கத்தை அமைக்கவும் டிராட்ஸ்கிச சோசலிசத்தொழிலாளர் கழகம் மட்டுமே இந்தியாவில் போராடி வருகிறது.

அதேபோல் இலங்கையில் இந்திய- சிறிலங்கா ராணுவங்களை தமிழ் ஈழ பிரதேசத்திலிருந்து வெளியேற்ற, சிறிலங்கா இனவாத முதலாளித்துவ அரசை தோற்கடித்து, பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் அடிபபடையில், தமிழ் ஈழ, சிறிலங்க ஐக்கிய சோசலிச அரசுகளை அமைக்க இலங்கை டிராட்ஸ்கிச இயக்கமான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் புரட்சிகரப் போராட்டத்திற்கு அனைத்து வழிகளிலும் உதவி அளிக்குமாறு இந்நாட்டுத் தொழிலாள வர்க்கத்தை சோசலிசத் தொழிலாளர் கழகம் கோருகிறது.

இந்திய முதலாளித்துவத்தின கேவலமான அடி வருடிகளாக ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், டெலோ, ஈ.என்.டி.எல்.எப். போன்ற அமைப்புகள் செயற் படுகையில, சோசலிச வேலைத் திட்டத்தை நிராகரிக்கும் ஊசலாட்டமுள்ள குட்டி முதலாளித்துவ எல்.டி.டி.ஈ. யின் தலைமை, இந்திய ராணுவத் குரூரமான நடவடிக்கைகளின் மத்தியில், மீண்டும் சதிகார இந்திய முதலாளித்துவ வர்க்கத்துல ''சமரச ஒப்பந்த''வலையில் வீழ்நதுள்ளது. ஒடுக்கப்படும மக்கள் இந்திய முதலாளித்துவத்தின் எந்த பிரிவினர் மேலும் சிறிதளவும நமபிக்கை வைக்காது, தொழிலாள வர்க்கத்தின் பின்னால் புரட்சிகர சோசலிச மற்றும் ஜன நாயக வேலைத் திட்டங்களை சூழ அணி திரண்டு ஒடுக்கு முறையாளர்களை தோற்கடிக்க வேண்டும்.

### 13. உயர் மட்டங்களில் ஊழலை ஒழி!

ஊழலை எதிர்த்துப் போராடுவதாக குரல் எழுப்பும் முதலாளித்துவ அரசியல் வாதிகளும், ஸ்டாலினிசத் தலைமைகளும், தமது சொந்த முடிவுகளுக்காக, அப்பிரச்சனையை வர்க்க சார்பற்ற ஒன்றாக எடுத்துக் காட்ட முயற்சிக்கின்றனர். சுரண்டலையும், சமத்துவ மின்மையையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாயததின் பிரதிவிளைவே ஊழலாகும்.

அமெரிக்காவிலிருந்து, இந்தியா வரையிலும், ஏனைய இடங்களிலும் உள்ள முதலாளித்துவ சமுதாயத்திலும், சலுகைகள் கொண்ட ரஷ்ய ஸ்டாலினிச அதிகாரத்துவம் மற்றும உருக்குலைந்த தொழிலாள வர்க்க அரசுகளின் மத்தியிலும் ஊழல் ஒரு தினசரி வாழ்க்கை முறையாக மாறி விட்டது; ஊழலை ஒழிக்க வேண்டுமாயின் சுரண்டலையும, சமத்துவமின்மையையும ஒழிப்பது அவசியமாகும் மேலும் மக்கள் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியை ஒழுங்கமைக்க வேண்டும், அதாவது ஒரு திட்டமிட்ட சோசலிச பொருளாதாரம்.

இந்த அமைப்புக்குள் ஊழலை ஒழிக்க போராடுவதாக ஸ்டாலினிசத் தலைமைகள் பேசுவது திட்டமிட்ட பொய்யும் ஏமாற்றுமாகும்.

### 14. ராஜீவ் காந்தி ராஜினமா செய்து புதிய தேர்தல்கள் நடத்த வேண்டும்!

தொழிலாளர்களை ஏமாற்றவும், அவர்களை முதலாளித்துவ ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கவும் உள்ள முதலாளித்துவ ஜனநாயகத்தின மீதும், முதலாளித்துவ பாராளுமன்றத்தின் மீதும, தொழிலாளர்கள் நமபிக்கை வைகக முடியாது, தொழிலாள வர்க்கம அதன் சொநத வர்க்க பலத்தில தங்கி சுதந்திரமான அதன் ஸ்தாபனங்களின் மூலமும், வர்க்கப் போராட்ட முறையின் மூலமுமம் ராஜீவ் காந்தி அரசாங்கத்தை மட்டுமல்ல, முதலாளத்துவ அரசையும் தூககிவீசும் போராட்டத்தை முன் எடுகக வேண்டும்.

தொழிலாள வர்க்கம் ''புதிய தேர்தல்களுககாக காத்திருக்க முடியாது. காரணம் தேர்தல்கள் முதலாளித்துவ ஆட்சியின் சார்பு ரீதியான ஸ்திரத் தன்மையுடன்சம்பந்தப்பட்டதாகும். ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடன் வைத்திருக்கும் அனைத்து அரசியல் உறவுகளையும் முறித்து, ஒரு காலவரையற்ற பொது வேலை நிறுத்தத்தின் மூலம் சோசலிச மற்றும ஜனநாயக வேலைத் திட்டங்களை அமுல் படுத்தப் போராடும் தொழிலாள, விவசாய அரசாங்கத்தை அமைப்பதற்கான போராட்டத்தைமுன்னெடுக்கவேண்டுமென தொழிலாளர்கள் கோர வேண்டும், இதன் மூலம் அத்துரோகத் தலைமைகளின் ''கம்யூனிச'' முகமூடி கிழிக்கப்படும்!

தேர்தல்களில் பங்கு கொள்வதும் அதை பகிஷ்கரிப்பதும் பெரும்பான்மை தொழிலாள வர்க்கததின் வர்க்க நனவு வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டதாகும். எவ்வாறுயினும் தேர்தல் பிரச்சாரங்கள் ஸ்டாலினசத் தலைமைகள் செய்வதைப் போல், அதிகப் படியானபாராளுமன்ற தாற்காலிகளை பிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் செய்யப்படக்கூடாது ஆனால் பாட்டாளி வர்க்க புரட்சிக்கான சுலோகங்களுடன் மக்களை புரட்சிகரமாக அணிதிரட்டும் ஆர்வத்தில செய்யபபட வேணடும். மார்க்ஸிஸ்டுகள், ''போல் ஷேவிக்குகளின் கார்ல் லிப்னெக்ட் போன்றோரின் முறையிலேயே பாராளுமன்றத்தை, முழுமையாக புரட்சிகர நோக்கங்களுக்காக பயன் படுத்துவதற்கு ஆதரவாக இருக்க வேண்டும்''.

டிராட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி தத்துவத்தையும், நான்காம் அகிலத்தின் இடை மருவு வேலைத் திட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு, சோசலிசத்தொழிலாளர் கழகத்தினால் முன் வைக்கப் பட்ட புரட்சி கர மாற்று வேலைத் திட்டத்தை நன்கு ஆய்வு செய்து, இந்தியாவில் உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதியைகட்ட முன்வருமாறு வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும இளைஞர்களையும் சோசலிசத் தொழிலாளர் கழகம் கோருகிறது.

---

**முதலாளித்துவ கட்சிகளுடன இரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகளும, வைத்திருக்கும் அனைத்து அரசியல் உறவுகளையும் துண்டிக்கும்படி நிர்ப்பந்தி !**

சோசலிசத் தொழிலாளர் கழகத்த்றகாக இ. பா. வெண் மணி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு சுப்பீரியர் கமர்ஷியல் எண்டர் பிரைசஸ் அச்சகத்தில் க. திருநாவுக்கரசுஅவர்களால் அச்சிடப்பட்டது.

# யாழ். கம்யூனிஸ்ட் கட்சி விஜயானந்தன் கொலையின் பின்னணியில்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் எஸ். விஜயானந்தன் படுகொலை செய்யப்பட்டமையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கண்டனம் செய்கின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட பிரசுரத்தில் விஜயானந்தன் இந்திய இராணுவத்தின் உளவாளியாகச் செயற்பட்டதால் அவரை கொலை செய்ததாக குறிப்பிட்டது. சென்னையில் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கை தமக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை எனக் குறிப்பிட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய — இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக நடாத்தி வரும் பாதுகாப்பு யுத்தத்தினை நியாயப்படுத்தும் புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகம் அந்த ஆக்கிரமிப்புப் படைகள் தொடர்பாக தோற்கடிப்புவாத நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

எவ்வாறெனினும் எதிர் அரசியல் இயக்கங்களின் அங்கத்தினர்களைப் படுகொலை செய்யும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கையாலாகாத்தனமான வங்குரோத்து விதிமுறைகளை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வன்மையாக எதிர்க்கின்றது. தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படுவோரை அரசியல் ரீதியில் அம்பலப்படுத்தி, தோற்கடிக்க இவ்வியக்கம் இலாயக்கற்று உள்ளதையே இப்படு கொலைகள் காட்டுகின்றன.

இலங்கை சம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களின் இந்திய — இலங்கை உடன்படிக்கையையும், இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பையும் ஆதரித்ததன் மூலம், அவர்கள் தமிழ் விடுதலைப் போராளிகளதும் வெகுஜனங்களதும் இரத்த வெள்ளத்தில் நீச்சலடித்த பேர் வழிகள் இவர்கள் காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களை தமிழ் தேசிய இனத்துக்கு 'ஜனநாயக உரிமைகளை வழங்கி' 'சமாதானத்தை' சிருஷ்டிப் போராக காட்டி வந்துள்ளது. இந்த எதிர்ப் புரட்சி வாயடிப்புக்கள் மூலம் தொழிலாள வர்க்கத்தின் கண்களில் மண்ணை வீசி, தமிழ் முதலாளித்துவ தலைவர்களின் முண்டுடன் முதலாளித்துவ ஐக்கிய அரசினை காக்க கம்யூனிஸ்ட் சட்சியின் ஸ்டாலினிஸ்டுகள் செயற்படுகின்றனர்.

தமிழ் விடுதலைப் போராட்டத்தின் தலைமையை கொண்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய முதலாளி வர்க்கம் தமக்கு ஆதரவு அளிக்கும் என்ற பொறியில் அகப்பட்டு சுயநிர்ணய உரிமைக்காக போராடுவதில் இருந்து பின் வாங்கவும் தயாராகி வருகின்றது. இன்று அவர்கள் தமக்கு 'அதிக அதிகாரங்களை கொண்ட 'தீர்வு' களை நாடும் பேரம் பேசல்களில் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களின் இச்செயற்பாடுகள் அவர்களின் வர்க்கத் தன்மையால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இத்தலைமை தமிழ் தேசிய முதலாளி வர்க்கத்தின் தீவிரவாதப் பிரிவினைச் சார்ந்தது.

இதனுல் இந்திய முதலாளி வர்க்கச் சார்பான எதிரிகளையும் சரி தொழிலாள வர்க்க கட்சிகளின் துரோகத் தலைவர்களையும் சரி வெளி வெளியாக அரசியல் ரீதியில் கண்டனம் செய்து; உறுதியான ஜனநாயக வேலைத்திட்டத்தினை முன்வைக்க விடுதலைப் புலிகளால் முடியாதுள்ளது. அதன் தேசிய சிறப்புரிமைவாத அரசியலானது முதலாளித்துவ நிர்வாகச் சிறப்புரிமைகள் சிலவற்றைப் பெற்றுக் கொள்ளும அளவுக்கு நாற்றம் எடுத்துள்ளது.

விஜயானந்தனின் கொலையை கண்டிக்கும் அதே வேளையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விஜயானந்தன் உள்ளடங்கலான ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தினையும் காட்டிக் கொடுக்க நடாத்தி வரும் இரத்தம் தோய்ந்த வழி முறைகளை வன்மையாகக் கண்டனம் செய்கின்றது அதன் எதிர்ப்புரட்சி தன்மையை அம்பலப்படுத்தி தோற்கடிக்கப் போராடுகின்றது. அவர்கள் தம்பால் படுகொலையை அழைக்கும் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திக் கொண்டுள்ளவர்களாவர். போர்த்துக்கீச ஒல்லாந்த, ஆங்கிலேய, சிங்கள ஆட்சியாளர்களின் கீழ் பல தசாப்தங்களாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் தேசிய இனம் தமது விடுதலைக்காக நடாத்தி வரும் போராட்டத்தில் ஸ்டாலினிஸ்டுகள் முக்கிய எதிரிகளாக விளங்குகின்றனர்: ஆரம்பம் முதலே இவர்கள் 'முதலாளித்துவ ஐக்கிய அரசினை' பேறுவதில் ஈடுபட்டுள்ளனர்.

## வெட்கக்கேடு

இந்த ஸ்டாலினிஸ்டுகள் அதனைப் பேணும் அடிப்படையில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் நடாத்தி வரும் வெட்கக் கேடான இரத்தம் தோய்ந்த ஒடுக்கு முறையைப் பேணுவதன் மூலம் தமிழ் விடுதலைப் போராளிகளுக்கு எதிராக மட்டுமன்றி, இந்திய இராணுவம் செய்யும் அழிவுகளை எதிர்க்கும் எந்தவொரு நபருக்கும் எதிராகவும் தாக்குதல் நடாத்துகின்றனர். தமிழ் பொது மக்கள் யுத்தத்தில் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என்கின்றனர்.

இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கும், ஆக்கிரமிப்புக்கும் இவ்விரு நாட்டினதும் தொழிலாள வர்க்கத்தினை பலியிடும் பொருட்டு இந்திய — இலங்கை ஸ்டாலினிசக் கட்சிகள் புனிதமான கூட்டினை அமைத்துள்ளனர்.

இந்த ஸ்டாலினிஸ்டுகள் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பவர்களை பற்றி உளவு பார்த்தால் அது ஒன்றும் புதினமல்ல. அந்த வேலைகளில் இப்பிராந்தியத்தில் அவர்களுக்கு வரலாற்று 'ரெக்கோட்' உண்டு. இரண்டாம் உலக யுத்தத்தின் போது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக காங்கிரஸ் முதலாளிகள் நடாத்திய 'வெள்ளையனே வெளியேறு' எதிர்ப்பியக்கத்தினை உடைக்க இந்திய ஸ்டாலினிச கட்சி தொழிற்பட்டது அதன் பேரில் அவர்கள் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு உளவு பார்த்து தகவல் சேகரித்து வழங்கி வந்தார்கள். இதற்கான நிச சாட்சிகள் உண்டு வரலாற்று அறிக்கைகளை உண்டு.

இதன் மூலம் இந்த ஸ்டாலினிஸ்டுகள் இந்திய கிராமிய விவசாயிகள் மீது மட்டும் அன்றி, தொழிலாள வர்க்கத்தின் மீதும் கூட காங்கிரசின் அரசியல் பிடியை இறுக வைப்பதற்கான நிலைமையை சிருஷ்டித்தனர்: இலங்கையில் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தினை வழி நடாத்திய அன்றைய சமசமாஜக் கட்சி தலைவர்களுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு உளவு பார்த்தனர். இந்த எதிர்ப்புரட்சியாளர்கள் மொஸ்கோ ஸ்டாலினிஸ்டுகளதும், உள்ளூர் முதலாளித்துவ அரசின் நலன்களின் பேரிலும் செயற்படுகின்றனர்.

இலங்கையில் ஸ்டாலினிஸ்டுகள் ஆரம்பம் முதலில் நடாத்தி வந்த காட்டிக் கொடுப்புக்களோடு 1964 ல் சமசமாஜக் கட்சியினர் இணைந்து கொண்டனர். சமசமாஜக் கட்சி தலைவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர்களுடன் சேர்ந்து இழைத்த காட்டிக் கொடுப்புக்களின் பெறுபேறாக தமிழ் மக்கள் தமது விடுதலையின் பேரில் தமது சொந்தப் பாதையில் இறங்கினர். இக்காட்டிக் கொடுப்பின் பெறுபேறாகவே குட்டி முதலாளித்துவ தேசிய புரட்சிகர தமிழ்ழ விடுதலைப் புலிகள இயக்கம் தோன்றியது.

## பிளவு

தமிழ் தேசிய இனத்தினை இனவாத ரீதியில் ஒடுக்கும் சிங்கள முதலாளித்துவ வர்க்கத்துடன் இத்தலைமைகள் கைகோர்த்துக் கொண்டதால் தொழிலாள வர்க்கத்தில் இருந்து தமிழ் ஒடுக்கப்படும் மக்கள பிளவுண்டு போயினர் பின்னர் சிங்கள இனவாத இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கும், இன்று இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் இவர்கள் ஒத்துழைப்பு வழங்கியதால் இப்பிளவு இரத்த களரியினுல உணர்த்தப்பட்டுள்ளது. இந்த விதத்தில் சிங்கள — தமிழ் மக்களை ஐக்கியப்படுத்த நாம் முயல்கின்றோம் என்ற இத்தலைமைகளின் மோசடிகள் சிதறடிக்கப்பட்டுள்ளன. இத்தலைமைகள் தமது காட்டிக் கொடுப்புக்கள் மூலம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் முன்னிலையில் தொழிலாள வர்க்கத்தை அவமானத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

மேலும் இந்தக் காட்டிக் கொடுப்பை மூடி மறைக்கும் பொருட்டு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் 'தேசியவாதத்தை' தென் இலங்கை இனவாத மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வீ. பீ.) யின் இனவாதத்துடன் சமப்படுத்தும் கடைகெட்ட முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், மக்கள் விடுதலை முன்னணிகளுக்குள் 'பாசிசம்' தோன்றுவதாகவும், முக்கிய சவால் அதுவே எனவும் ஸ்டாலினிச பாராளுமன்ற உறுப்பினர் டியூ குணசேகர குறிப்பிட்டார். இதன் அர்த்தம் என்ன?

இந்த இரண்டு இயக்கங்களையும் தவிடு பொடி ஆக்கதாம் முதலாளித்துவ யூ. என்: பி. அரசாங்கத்துடன் இணைந்து நிற்பதை அவர் சுட்டிக் காட்டினுர். தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டுள்ள யூ. என் பி. அரசாங்கத்துக்கும் முதலாளித்துவ சிறீலங்கா — மக்கள் விடுதலை முன்னணி கூட்டில் இருந்தும் கவனத்தை வேறு திசையில் திருப்ப இப்பிரச்சாரம் முயல்கின்றது.

இச்சகல நழுவல்படிகள் மூலம் இத்துரோகத் தலைமைகள் தமிழ் தொழிலாள வர்க்கத்தை தேசிய புரட்சியாளர்களின் பிடிக்குள் தள்ளவும், அத்தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாள வர்க்கத்துடன் இணைவதை தடுக்கவும் தொழிற்படுகின்றனர் இத்தலைமைகள் சிங்கள ஊறிந்து பேரின முதலாளி வாக்கத்தின் தேசிய வெறியின் காப்பாளர்களாக விளங்குகின்றனர். இது தமிழ் தேசிய இனத்தை தொடர்ந்தும் ஒடுக்கப்படும் இனமாக வைத்திருப்பதற்கான முதலாளித்துவ வேலைத்திட்டத்துக்கு தோள் கொடுப்பதாகும்

இத்தலைமைகள் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கும், ஆக்கிரமிப்புக்கும் வழங்கும் ஆதரவை உடனடியாக நிறுத்தும் படியும். முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சியுடனுன கூட்டினை துண்டிக்கும் படியும் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்துக்காகப் போராடும் படியும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைமகளை நெருக்குவதன் மூலம் அவர்களின் துரோக வழி முறையை தோற்கடிக்கும் படியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டி எழுப்பும் படியும் நாம் சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் வங்குரோத்தானது, தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கான பாதையை சிறீலங்கா — தமிழ் ஈழ தொழிலாள வர்க்கத்தினுல் மட்டுமே காட்ட முடியும் என்பதை ஊர்ஜிதம் செய்துள்ளது. தொழிலாள வர்க்கத்தின் மேல் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. தலைமைகளும் அரசாங்க லிகிதர் சேவை — இலங்கை ஆசிரியர் சங்க மத்தியவாதிகளும் கொண்டுள்ள பிடியை உடைத்து தமிழ் தேசிய இனப் பிரச்சினையையும், கிராமப்புற விவசாயிகள் பிரச்சினையையும் தீர்த்து வைக்கும வரலாற்றுப் பணியில் ஈடுபட வேண்டும். இப்பணிக்கு தோள் கொடுக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணையுங்கள்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை வழங்கு! அரசியல் கைதிகளை விடுதலை செய்!

தோட்டத் துறையைச் சேர்ந்த 160 இளைஞர்கள் அரசியல் கைதிகளாக கைது செய்யப்பட்டதை எதிர்த்தும் தோட்டத் தொழிலாளரின் குடியுரிமையை தாக்கி அவர்களை பலாத்காரமாக இந்தியாவுக்கு தள்ளுவதை எதிர்த்தும் தோட்டத் தொழிலாளர்கள் நடாத்தும் போராட்டத்துடன் இணைந்து ஆதரிக்குமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவினரையும் வேண்டுகின்றது.

கடந்த மாதம் சுமார் 3000 தோட்டத் தொழிலாளர்கள், பெண்கள்; குழந்தைகள் ஆகியோர் கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்யும் படி கோரி 1 நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். தோட்டப் பகுதியில் மக்களின் பேராதரவைப் பெற்ற இந்த எதிர்ப்பியக்கத்தில் இ. தொ. கா. தொழிலாளர்கள் உட்பட அநேக தொழிற் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

யூ. என். பி. அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள தொண்டமான் தலைமை இந்த எதிர்ப்பியக்கத்தை வன்மையாகக் கண்டனம் செய்தது. அத்துடன் நின்று விடாமல் இந்த எதிர்ப்பு இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய மாவட்ட இ. தொ. கா. தலைவர் சந்திரசேகரனிடம் விளக்கமும் கோரியது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்கள் உட்பட்ட சிறைக் கைதிகள் மஹறசின், வெலிக்கடை, பூசா, போகாம்பரை முதலான சிறைகளிலும் பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் சிறை வைக்கப்பட்டுள்ளனர். கண்டி இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுமார் 10 இளைஞர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள்? அவர்களின் நிலைமை என்ன? என்பதை எவரும் அறியார்.

இந்த இளைஞர்கள் அந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். கடந்த காலத்தில் தோட்டங்களில் பல்வேறு வேலை நிறுத்தங்கள், போராட்டங்களை தாக்கும் பொருட்டு அரசாங்கம் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பாவித்தது. இளைஞர்களை கைது செய்யும் பொருட்டு தோட்டங்களுள் பொலிசார் பாய்ந்து விழ அரசாங்கம் இடைவிடாது செயற்பட்டு வந்தது. வடக்கு — கிழக்கில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் யுத்தத்துடன் தொழிலாள வர்க்கத்தைப் பிளவுபடுத்தவும், தோட்டத் தொழிலாளரை ஒடுக்கவும் யூ. என். பி. அரசாங்கம் தலைப்பட்டது. தமிழ் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பு உளளதாகக் கூறி தோட்டப் பகுதிகளில் பயமுறுத்தல் இயக்கங்களை அரசாங்கம் ஆரம்பித்ததற்குக் காரணம் இவே.

இலங்கைத் தொழிலாள வர்க்கத்தை இன ரீதியில் பிரிக்கவும், முதலாளி வர்க்க ஆட்சியை கொண்டு நடாத்தவும் 1948 ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை நீக்கி, அரசியல் உரிமையை பிடுங்கிக் கொண்டு இலங்கை ஆளும் வர்க்கம் செயற்பட்டது. 1964ல் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இத்தாக்குதல் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஜயவர்தனா — காந்தி கைச்சாத்திட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு முக்கிய சரத்து: தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு துரத்துவதாகும் இந்தியாவுக்கு ஓட்டிக் கலைக்கப்படும் தொழிலாளர்கள் தொழில் அற்ற அனாதைகளாக அழிவினுள் தள்ளப்படுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களுககு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள இந்த ஒடுக்கு முறையை மேலும் உக்கிரம் ஆக்கும் பொருட்டு யூ. என். பி. அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆழமாகி வரும் பொருளாதார நருக்கடியின் சுமையை தொழிலாளர்கள் மீது திணிப்பதே இதன் இலக்கு.

கைது செய்தல்களை எதிர்த்து தொழிலாளர்கள் இடையே ஏற்பட்டு வரும் எதிர்ப்பினை கட்டுப்பாட்டுக்குள் கொணடு வரும் பணிகளில் தொண்டமான் தலைமை ஈடுபட்டுள்ளது. தோட்டப் பகுதியில் கிளர்ந்து வரும் இளைஞர்களையும் போராளி தொழிலாளர்களையும் இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பிரிவினரில் இருந்து பிரித்து தனிமைப்படுத்தும் பணியில் தொண்டமான் சமசமாஜ — சம்யூனிச — நவசமசமாஜ கட்சித் தலைவர்களுடன் கூட்டாக ஈடுபட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றவும், இந்தியாவுக்கு அனுப்புவதை துரிதப்படுத்தவும் அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம், சிறிமா — இந்திரா ஒப்பந்தங்கள் மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இந்தியாவுக்கு பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்.

தொழில்களில் இருந்து விலக்கி தாம் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதை அநேக தொழிலாளர்கள் எதிர்த்தனர். இந்நிலையில் 1987 ஜூலை 29 ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய — இலங்கை உடன்படிக்கை தோட்டத் தொழிலாளர்களை பலாத்காரமாக இந்தியாவுக்கு அனுப்பும் நிலைமைகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது

இதற்கிடையே குடியுரிமைக்காக விண்ணப்பித்த தொழிலாளர்களான் பேரன், பூட்டன்கள் இலங்கையில் பிறந்ததாக அத்தாட்சி படுத்தும் படி கோரப்படுகின்றனர். இதனால் சில தொழிலாளர்களின் பிறப்புச் சாட்சிப் பதத்ரங்கள் திட்டமிட்டு இனவாதிகளால் நாசமாக்கப் பட்டுள்ளன.

இ. தொ. கா. தலைவர்களின் இந்த தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை தொழிலாளர் வர்க்கம் அடியோடு நிராகரிக்க வேண்டும் இத்துரோகிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஆனவாத ஆத்திர மூட்டல்கள் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் இளைஞர்கள் கைது செய்யப்படுவதை நியாயப் படுததுகின்றனர்

தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை அகற்றுதல், முதலாளித்துவ ஆட்சியாளர்ளுக்கு வேண்டிய முறையில் இந்தியாவுக்கு வெளியேற்றுதல், அகதிகளாக்குதல் என்பவற்றை தொண்டமான் — செல்லச்சாமி தலைமை ஏற்றுக் கொண்டுள்ளது

1948 ன் குடியுரிமை மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விட்டு பின்னர் அதை ஏற்றுக் கொண்ட சமசமாஜ — ஸ்டாலினிச — கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் 1964 ன் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, இன்று இந்திய — இல

## தோட்டத் தொழிலாளர்களின் . .

ங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் தொண்டமானின் காட்டிக் கொடுப்புக்கும், இந்திய — இலங்கை ஆட்சியாளர்களின் தாக்குதல்களுக்கும் சகாக்களாகியுள்ளனர்.

இ. தொ. கா. தலைவர்களும சமசமாஜ — சம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களும் இழைத்து வரும் கேவலமான காட்டிக் கொடுப்புக்களின் மத்தியில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், குடியுரிமைக்காக போராடவும் திடசங்கற்பம் பூண்டுள்ள தோட்டத் தொழிலாளர்களை நகர்ப்புறக தொழிலாள வர்க்கத்துடனும் இந்தியத் தொழிலாள வர்க்கத்துடனும் ஐக்கியப்படும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுமாறு வேண்டுகின்றோம். நகர்ப்புறத் தொழிலாள வர்க்கம் தமது ஐக்கியத்தை கட்டி எழுப்புவதன் மூலம் இலங்கையிலும் இந்தியாவிலும் முதலாளி வர்க்க எதிரிகளும், அவர்களின் அரசாங்கமும், அவர்களின் ஏஜன்டுகளும் தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்தி, தாக்கச் செய்யும் நடவடிக்கைகளை தோற்கடிக்க முன்வர வேண்டுமென நாம் வேண்டுகின்றோம்.

(1) தமிழ் விடுதலைப் போராட்டத்தை தோற்கடிக்கவும் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை தாக்கவும், முதலாளித்துவ ஆட்சியை காக்கவும் திணிக்கப்பட்டுள்ள இந்திய — இலங்கை உடன்படிக்கையையும், வட — கீழ் மாகாணங்களில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை தோற்கடிக்கவும்.

(2) முதலாளித்துவ ஒடுக்குமுறையை கட்டவிழ்க்க திணிககப்பட்டுள்ள அரசியல் கைதிகள் கைது, தொழிற் சங்க எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்தவும்.

(3) ஏகாதிபத்திய வங்கியாளர்களும், பன்னாட்டு கம்பனிகளும முதலாளித்துவ கம்பனிகளுடன் கூட்டாகச் செய்யும் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுததம், தோட்டங்களை தனியாரிடம ஒப்படைத்தல், ஊழியர் எண்ணிக்கை குறைப்பு, வாழ்க்கைத் தரம் வெட்டு

ஆகியவற்றை எதிர்த்து பக்டரிகளுள் உள்ளமர்வு போராட்டம், பொது வேலை நிறுத்தம ஆகியவற்றுக்கு தயாா செய்யவும் யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றி சோசலிச வலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்துக்கு போராடவும் இந்தத் தொழிற் சங்க மகாநாட்டில் முடிவு செய்ய வேண்டும்.

இந்த விதத்தில் தலைவாகலை இ. தொ. கா. தலைவர் சநதிரசேகரன் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடாத்தும் 'எதிர்ப்பு' இயக்கம் யூ. என். பி அரசாங்கத்தில் இருந்து இ. தொ. கா. தலைமையை வெளியேற்றும் படி நெருக்குதல் பிற்போக்கு இந்திய — இலங்கை உடன்படிக்கையை தோற்கடித்தல், இந்திய ஆக்கிரமிப்பு படைகளை வெளியேற்றுதல் சம்பந்தமான பிரசினைகளை தவிர்க்கும் நிலையில் அது இ. தொ. கா. தலைமையின் துரோகத்தை தோற்கடிப்பதற்கான நிச நிலைமைகள் தோட்டத் தொழிலாளர்களிடையே வளர்ச்சி காண்பதை தவிர்ப்பதாக முடியும். இந்நிலையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் போராட்டம் முதலாளித்துவ அரச இயந்திரத்தை சிதறக்கும் போராட்டத்துடன் இணைந்துள்ளது என்பதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டுகின்றது

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இந்திய, இலங்கை கிளைகளான சோசலிசத் தொழிலாளர் கழகம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து அவற்றை உலக சோசலிசப் புரட்சியின் கட்சிகளாக கட்டி எழுப்பவும் 'தொழிலாளர் பாதை' வாசகர்களாகவும் முன்வரும் படி நாம் சகலரையும் வேண்டுகின்றோம்.

படிப்பகம்